# நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் சந்தித்த ரமளான்

அஷ்ஷைக் எம்.ஜே.எம். ரீஸ்வான் மதனி
M.A. (Cey)

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | நபிகள் நாயகம் ﷺ அவர்கள் சந்தித்த ரமளான் |
| தொகுப்பு | :- | எம்.ஜே.எம். ரிஸ்வான் (மதனி) |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | :- | 60 |
| அச்சிட்டோர் | :- | எம்.இஸட். முஹம்மத் - காலி<br>0777 42 43 09 / 07 16 16 82 82 |
| முதல் பதிப்பு | :- | 20 - 05 - 2016 (2000 பிரதிகள்) |
| இரண்டாம் பதிப்பு | :- | 20 - 05 - 2017 (3000 பிரதிகள்) |
| வெளியீடு | :- | தைபா பப்ளிகேஷன் |

# முன்னுரை

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தமானதாகும். அவனது அருளும், சாந்தியும் இறுதித் தூதர் முஹம்மத் (ﷺ) அவர்கள் மீதும் அவர்களின் வழிநடந்த முஸ்லிம்கள் அனைவர் மீதும் உண்டாகட்டுமாக!

ரமளான் பாக்கியம் நிறைந்த மாதமாகும். புனித மிகு வேதமாகிய அல்குர்ஆன் லைலத்துல் கத்ர் எனும் கண்ணியமிக்க இரவில் இறங்கியது. அவ்விரவு ஆயிரம் மாதங்களைவிட சிறந்ததாகும்.

ரமளான் வந்தால் சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன, நரகவாயில்கள் மூடப்படுகின்றன. கட்டுக்கடங்காத ஜின்கள் விலங்கிடப்படுகின்றன என்பது நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் போதித்த இஸ்லாமிய நம்பிக்கையாகும்.

ரமளான் மாதத்தினை பல வருடங்கள் சந்தித்த அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அதன் சிறப்பையும், மகிமையையும் அடைந்து கொள்ள தன்னாலான முயற்சிகள் செய்தார்கள். அவற்றில் பல வழிமுறைகளை தனது சமுதாய மக்களுக்கும் அறிமுகம் செய்துள்ளார்கள்.

அவற்றைப் பற்றி ஒரு முஸ்லிம் சரியாக அறிந்து செயல்படுவதால் நிச்சயமாக அவன் ரமளானின் பாக்கியத்தை அடைந்தவனாக மாறுவான். அதில் நாமும் உள்ளடங்கிட அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஒளியில் முக்கியமான சில வழிகாட்டல்கள் இங்கு தரப்படுகின்றன. இவற்றை எடுத்து நடக்க நம் அனைவர்களுக்கும் அல்லாஹ் அருள் செய்வானாக. இச்சிறு நூலை வெளியிடுவதற்கு பூரண உதவி செய்த அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும் சொந்தமானது.

அல்ஹம்துலில்லாஹ்!

*இவண்: எம்.ஜே.எம். ரிஸ்வான் (மதனி)*

## ஷ.ஃபான் மாதத்தில் அதிகமாக நோன்புகள் நோற்றமை.

வரவிருக்கும் ரமளானில் நோன்பை சரியான அமைப்பில் பேணவல்ல ஒரு வழிமுறைதான் ஷ.ஃபான் மாத நோன்பு. ஷ.ஃபான் மாதத்தில் நோன்பு நோற்பதால் ரமளானில் உடலின் இசைவாக்கத்தை, இயக்கத்தை ஒரு சமநிலைக்கு கொண்டு வரமுடியும் என்பது ஷ.ஃபான் நோன்பு கற்பிக்கின்ற பாடமாகும்.

நோன்பின் மூலம் ஏற்படும் உடலியல் மாற்றம் என்பது இயல்பானதுதான். அதை ரமளானில் கொண்டு வருவதற்கு முன்னால் ஷ.ஃபான் மாதத்தில் பழக்கப்படுத்தி, அதற்காக தயாராகுவது அற்புதமான நடைமுறையாகும். அந்த அழகிய நடைமுறை அண்ணல் நபி (ﷺ) அவர்களிடம் காணப்பட்டது.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ كَانَ رَسُولُ اللهِ صَلَّ اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَصُومُ حَتَّى نَقُولَ لَا يُفْطِرُ وَيُفْطِرُ حَتَّى نَقُولَ لَا يَصُومُ فَمَا رَأَيْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اسْتَكْمَلَ صِيَامَ شَهْرٍ إِلَّا رَمَضَانَ وَمَا رَأَيْتُهُ أَكْثَرَ صِيَامًا مِنْهُ فِي شَعْبَانَ (متفق عليه)

நபி (ﷺ) அவர்கள் நோன்பை விடமாட்டார்களோ என்று நாம் பேசிக்கொள்கின்றவரை (ந.ஃபிலான) நோன்புகளை நோற்று வருவார்கள். இனி நோன்பு நோற்கமாட்டார்கள் போல என்று நாம் கூறும் நிலைவரும் வரை (அதை) விட்டுவிடுவார்கள். ரமளானைத்தவிர வேறு எந்த மாதத்தையும் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் முழுமையாக நோன்பு நோற்றிட நான் காணவில்லை. அத்தோடு, ஷ.ஃபான் மாதத்தைவிட வேறு எந்த மாதங்களிலும் அதிகமாக நோன்பு நோற்க நான் கண்டதில்லை என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

## ஷ.ஃ.பானில் குறைந்தது இரு நோன்புகள் நோற்றல்.

பொதுவாக ஷ.ஃ.பானில் நோன்பு நோற்பதும் குறிப்பாக அதில் இரண்டு நோன்புகள் நோற்பதும் அதுவும் அதன் நடுப்பகுதியில் அல்லது இறுதிப்பகுதியில் நோற்பது வலியுறுத்தப்பட்ட நபிவழியாகும்.

ஆனால் ஷ.ஃ.பானில் பராஅத் நோன்பு என்ற பெயரில் இன்றும் வழக்கமாக நோற்கப்படும் இரு நோன்புகளுக்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. ஷ.ஃ.பான் மாத நடுப்பகுதியில் குர்ஆன் இறங்கியதாக நம்புவது குர்ஆனுக்கு மாற்றமான நம்பிக்கையாகும்.

عَنْ عِمْرَانَ بْنِ حُصَيْنٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: أَنَّهُ سَأَلَهُ - أَوْ سَأَلَ رَجُلًا وَعِمْرَانُ يَسْمَعُ -، فَقَالَ: «يَا أَبَا فُلاَنٍ، أَمَا صُمْتَ سَرَرَ هَذَا الشَّهْرِ؟» قَالَ: - أَظُنُّهُ قَالَ: يَعْنِي رَمَضَانَ -، قَالَ الرَّجُلُ: لاَ يَا رَسُولَ اللَّهِ، قَالَ: «فَإِذَا أَفْطَرْتَ فَصُمْ يَوْمَيْنِ «مِنْ سَرَرِ شَعْبَانَ» أخرجه البخاري

நபி (ﷺ) அவர்கள் ஒரு மனிதரிடம் நீ ஷ.ஃ.பான் மாத இறுதிப்பகுதியில் உள்ள நாட்களில் நோன்பு நோற்றாயா எனக் கேட்டார்கள். அவர் இல்லை அல்லாஹ்வின் தூதரே! என பதில் அளித்தார். அவரிடம் நீ ரமளான் மாத நோன்பு முடிந்ததும் இரண்டு தினங்கள் நோன்பு நோற்றுக்கொள் எனக் கூறினார்கள். (புகாரி)

மற்றொரு அறிவிப்பில் ரமளான் மாத நோன்பு முடிந்ததும் அதற்குப் பதிலாக இரு நோன்புகள் நோற்றுக் கொள் எனக் கூறியதாக இடம் பெற்றுள்ளது.

குறிப்பு: மேற்படி ஹதீஸை விளக்குகின்ற அறிஞர்கள் சுர்ரத் என்ற சொல்லின் பன்மையான (சுரர்) என்ற சொல் இடம் பெற்றுள்ளதாகவும், சுர்ரத் என்பதற்கு தொப்பிள் என்பது பொருளாகும் எனவே அது நடுப்பகுதியில் இருப்பதைக் கவனத்தில் கொண்டு இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடு-கின்றனர். அதே நேரம் சிலர் சுரர் என்பது பௌர்னமி இரவுகள் கடந்த பின்னால் மறைந்து வரும் இரவுகள் என விளக்கி உள்ளனர். அதுவும் (நடுப்பகுதி) என்பதற்கு பொருத்தமான பொருளாகும்.

சிலர் சுரர் என்பதற்கு ஷ.்.பான் மாத அய்யாமுல் பீள் எனப்படும் 13, 14, 15 வது நாட்கள் என விளக்கமளித்-திருப்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

மேற்படி கருத்துக்குக்கமைய ஒருவர் பராஅத் நோன்பு என்று நோற்காமல் ஷ.்.பான் மாத நோன்பு என்று மாற்றி நோற்கின்ற போது இந்த நபிவழியை நடைமுறைப்படுத்தியவராக ஆகுகின்றார்.

மேலும் சுரர் என்ற சொல்லுக்கு பெரும்பாலான அறிஞர்களால் இறுதிப்பகுதியென்று சொல்லப்படுவதனால் நாம் ஷ.்.பானின் இறுதிப்பகுதி என மொழியாக்கம் செய்துள்ளோம். ஷ.்.பானின் இறுதிப்பகுதியில் நோன்பு நோற்றல் விரும்பத்தக்கதாகும். (அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்)

## ரமளான் கால நோன்பைக் கடமையாக்கியதும் அதனை நோற்றதும்.

ரமளான் கால நோன்பு இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாக சேர்க்கப்பட்டிருப்பதை பள்ளிப்-பருவத்திலேயே ஒரு முஸ்லிம் போதிக்கப்படுவது அவன் பெரியவனாகிய பின்பு அந்தக்கடமையை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தானே அன்றி அதனை பாழடிப்பதற்காக அல்ல.

சிறுபருவத்தில் ஆர்வத்துடன் நோன்பு நோற்பதற்கு பழக்கப்பட்ட ஒரு முஸ்லிம் பருவ வயதெல்லையை அடைந்ததும் புனிதமான இக்கடமையைப் பாழடிக்க வேண்டிய அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு பாழடிக்கின்றான்.

தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை என்பதைப் பொய்ப்-பிக்கின்ற இந்தத் தீய நடைமுறையை இவன் தனது வெளிச் சூழல்களில் இருந்தே கற்றுக் கொள்கின்றான். பெரியவனாகியும் இக்கடமையில் அலட்சியம் செய்யும் ஆபத்தான இந்த நடைமுறை அவனது மார்க்கப் பண்பாட்டிற்கு ஆரோக்கியமானதல்ல.

ஆரம்ப காலங்களில் பட்டினி கிடந்து நோன்பு நோற்ற நபித்தோழர்களின் சின்னஞ் சிறுசுகளின் பட்டியலில் இவனும் ஒருவனாக இருந்து, இவ்வாறான துரதிஷ்ட நிலைக்குப் போனதை நினைக்கின்ற போது அல்லாஹ்வின் கடமையில் இவன் எவ்வளவு அலட்சியம் செய்கின்றான் என்று சிந்தித்துப்பாருங்கள்.

நாட்டுப்புற மனிதர் ஒருவர் அல்லாஹ்வின் தூதரிடம் வந்து எனக்கு ஒரு அமலைச் சொல்லித்தாருங்கள், அதைச் செய்வதால் நான் சுவர்க்கம் செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு நீ அல்லாஹ்வை அவனுக்கு எந்த ஒன்றையும் இணையாக்காமல் வணங்குவதும், விதிக்கப்பட்ட தொழுகையை தொடராகப் பேணி வருவதும், கடமை-யாக்கப்பட்ட ஸகாத்தை கொடுப்பதும், ரமளானில் நோன்பு நோற்பதும் எனக் கூறினார்கள். உடனே அவர், எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் (அல்லாஹ்வின்) மீது சத்தியமாக இவற்றைவிட நான் (எதையும்) அதிகரிக்காது கட்டாயம் பேணிவருவேன் என்றார், இதைக் கேட்ட நபி (ﷺ) அவர்கள் அவர் திரும்பிச் சென்ற போது

مَنْ سَرَّهُ أَنْ يَنْظُرَ إِلَى رَجُلٍ مِنْ أَهْلِ الْجَنَّةِ فَلْيَنْظُرْ إِلَى هَذَا

யார் சுவன வாதியொருவரை (இவ்வுலகில்) பார்க்க ஆசைப்படுகின்றாரோ அவர் இவரைப் பார்த்துக் கொள்ளட்டும் எனக் கூறினார்கள். (புகாரி)

மேற்படி ஹதீஸ் நோன்பு நோற்பதால் ஒரு மனிதர் இஸ்லாமியக் கடமை ஒன்றைப் பேணிய, சொர்க்கத்-திற்கான பதிவையும் செய்து கொள்கின்றார் என்ற உண்மையினை விளக்குகின்றது. இவ்வளவு பெரும் மகத்துவம் மிக்க இந்தக்கடமையில் அலட்சியம் செய்யும் முஸ்லிம் பெயர்தாங்கிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ரமளான் மாத நோன்பு கடமையாக்கப்படுவதற்கு முன்னால் முஸ்லிம்கள் முஹர்ரம் மாதத்தின் பத்தாவது நாள் கடமையாக நோன்பு நோற்று வந்தனர், ஸஹாபாப் பெண்கள் அதைத் தாமும் நோற்றதோடு தமது குழந்தைகளையும் அந்த நோன்பைப் பிடிக்கச் செய்தார்கள். பசியினால் அக்குழந்தைகள் கதறும் போது பஞ்சினால் தயாரிக்கப்பட்ட பொம்மைகளைக் கொடுத்து நோன்பு திறக்கும் நேரம் வரும் வரை அவர்களது கவனத்தை திசைதிருப்பிவிடுவார்கள் என்ற செய்தியை புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட பல ஹதீஸ் கிரந்தங்களில் காண்கின்றோம். இவ்வாறான நிலை நம்மிடமும், நமது குழந்தைகளிடமும் வருவதற்கு என்ன முயற்சி செய்துள்ளோம் என்று கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

தமது குழந்தைகள் உலகக் கல்வியில் முதல்தர புள்ளிகள் பெற்று, அரச, மற்றும் ஊர் பாராட்டுப் பெறவேண்டும் என்பதற்காக நமது பெற்றோர்களால் எவ்வாறான முயற்சிகள் செய்யப்படுகின்றன என்பதை நாம் அறிவோம்.

அல்லாஹ்வின் பாதையில் நோன்பு நோற்பதால் நரகத்தில் இருந்து எழுபது ஹரீ.ஃப் ஆண்டுகள் நோன்பு நோற்பவரின் முகம் தூரமாக்கப்படுகின்றது என அல்லாஹ்வின் தூதரும் உத்தரவாதம் தருகின்றார்கள் என்றால் நாம் எதை முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சிந்தியுங்கள்.

## சென்ற ரமளானின் நோன்பைக் களாச் செய்தல்.

வயது வந்த ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் ரமளான் நோன்பு கட்டயாப்படுத்தப்பட்டுள்ள கடமையாகும். அதை அந்த மாதத்தில் இறை நம்பிக்கையுடனும், அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தும் நோற்பது ஒரு இறைவிசுவாசியின் கடமையாகும். தவறும் நோன்புகளை பிறமாதங்களில் நோற்றாக வேண்டும். முடியாத போது அதை ரமாளனுக்கு முன்னைய ஷ.ஃபான் மாதத்திலாவது களாச் செய்ய வேண்டும்.

عن عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا تَقُولُ كَانَ يَكُونُ عَلَيَّ الصَّوْمُ مِنْ رَمَضَانَ فَمَا أَسْتَطِيعُ أَنْ أَقْضِيَ إِلَّا فِي شَعْبَانَ قَالَ يَحْيَى الشُّغْلُ مِنْ النَّبِيِّ أَوْ بِالنَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ (صحيح البخاري)

ரமளான் மாதத்தின் கடமையான நோன்பு எனக்கிருந்து கொண்டிருக்கும். அல்லாஹ்வின் தூதரின் பணிவிடைகள் காரணமாக அதை (மறுவருட) ஷ.ஃபானில்தான் எனக்கு களாச் செய்ய முடியுமாகும் என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி).

**ரமளான் மாத மன்னிப்பை இழப்பது மாபெரும் துர்ப்பாக்கியமாகும்.**

புனிதம் நிறைந்த ரமளானின் நோன்பை நோற்பவர் முன்செய்த தனது பாவங்கள் மன்னிக்கப்பட்டவராக மாறுகின்றார் என நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்). இந்த மன்னிப்பின் பிரதிபலனை அடைந்து கொள்ள ஒரு முஸ்லிம் துடியாய்த்துடிக்க வேண்டும்.

பாவங்கள் மன்னிக்கப்படுவது எவ்வளவு பெரும் பாக்கியம் என்று ஒரு முஸ்லிம் சிந்தித்து அதில் அதிக சிரத்தை காட்ட வேண்டும். இல்லையெனில் ஈமானின் ஈரம் இல்லாதவனாகவே அவன் கருதப்படுவான்.

ரமளானை யார் அடைந்து அவனது பாவமும் மன்னிக்கப் படவில்லையோ அவன் நாசமாகட்டும் என ஜிப்ரீல் (அலை) அவர்கள் சபித்ததற்கு நபி (ﷺ) அவர்கள் ஆமீன் எனக் கூறியதாக இப்னு ஹிப்பான், தபரானி போன்ற கிரந்தங்களில் இடம் பெறும் அறிவிப்பை சிலர் குறைகண்டாலும் அதை ஹஸன் என்ற தரத்தில் அமைந்தது என ஹதீஸ்கலை அறிஞர் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுவதை ஆதாரமாகக் கொண்டே இவ்வாறு எழுதுகின்றோம்.

**உம்ராவை வலியுறுத்தியமை**

ரமளானில் செய்யப்படும் உம்ரா ஏனைய காலங்களில் செய்யப்படும் உம்ராவை விட பண்மடங்கு சிறப்பு வாய்ந்ததாகும்.

நபி (ﷺ) அவர்கள் அன்ஸாரிப் பெண்களில் ஒருவரான உம்மு ஸினான் (ரழி) அவர்களிடம் (இவ்வருடம்) எம்முடன் சேர்ந்து "ஹஜ்" செய்யாததற்கான காரணம் என்ன? என வினவினார்கள், எமக்கு நீர் இறைக்கும் இரண்டு ஒட்டகைகள் இருந்தன. அவற்றில் ஒன்றை எனது கணவரும், அவரது மகனும் "ஹஜ்" செய்வதற்காக எடுத்துச் சென்றனர். மற்றொன்றை எமது அடிமைச் சிறுவன் அதில் நீர் இறைப்பதற்காக விட்டுச் சென்றனர். என்றார்கள் அப்படியானால்

**فإذا جاء رمضان فاعتمري فإن عمرة فيه تعدل حجة أو حجة معي** (أخرجه مسلم)

"ரமளான் வந்தால் நீ உம்ரா செய்து கொள். ஏனெனில் அதில் செய்யப்படும் உம்ரா "ஹஜ்" செய்ததற்கு சமமாகும். அல்லது. என்னுடன் "ஹஜ்" செய்ததற்கு சமமாகும்". எனக் கூறினார்கள். (முஸ்லிம்).

## வாரி வழங்குதல்

இது சகல காலங்களிலும் வேண்டப்பட்ட ஒரு வணக்கமாக இருப்பினும் ரமளானில் நபி (ﷺ) அவர்கள் அதிகம் ஈடுபாடுகாட்டிய முக்கிய வழிமுறையாகும்.

**عَنِ ابْنِ عَبَّاسٍ ، رَضِيَ اللهُ عَنْهُمَا ، قَالَ : كَانَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم أَجْوَدَ النَّاسِ ، وَكَانَ أَجْوَدَ مَا يَكُونُ فِي رَمَضَانَ حِينَ يَلْقَاهُ جِبْرِيلُ ...** (أخرجه البخاري)

நபி (ﷺ) அவர்கள் மக்களிலேயே அதிகமாக வாரி வழங்கும் கொடை வள்ளலாக இருந்தார்கள். அவர்கள் ரமளான் மாதத்தில்தான் ஜிப்ரீல் (அலை) அவர்களை சந்திக்கின்ற போது மிகவும் வாரி வழங்குபவர்களாக இருந்தார்கள். மேலும் அவர்கள், தொடர்ந்து வீசும் (புயல்) காற்றை விட நபி (ﷺ) அவர்கள் நல்லவற்றை வாரிவழங்குவார்கள். (புகாரி)

**அல்குர்ஆனை அதிகமதிகம் ஓதுதல்.**

அல்குர்ஆனுடன் அல்லாஹ்வின் தூதர் எவ்வாறான தொடர்பை ஏற்படுத்தி இருந்தார்கள்? ஒரு முஸ்லிமின் வாழ்வில் அதன் முக்கியத்துவம் என்பதை விளக்கிட பின்வரும் நிகழ்வே போதுமான சான்றாகும்.

وَكَانَ جِبْرِيلُ يَلْقَاهُ فِي كُلِّ لَيْلَةٍ مِنْ رَمَضَانَ فَيُدَارِسُهُ الْقُرْآنَ فَلَرَسُولُ اللهِ صلى الله عليه وسلم حِينَ يَلْقَاهُ جِبْرِيلُ أَجْوَدُ بِالْخَيْرِ مِنَ الرِّيحِ (أخرجه البخاري)

(வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமளானின் ஒவ்வோர் இரவிலும் நபி (ﷺ) அவர்களை சந்திப்பது வழக்கம். (அப்போது) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அல்குர்ஆனை ஓதிக் காட்டுவார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்களை சந்திக்கும் வேளையில் வேகமாக வீசும் காற்றைவிட நன்மையின் கொடையாளியாக இருப்பார்கள். (புகாரி)

அல்லாஹ்வின் வேதம் இறக்கி அருளப்பட்ட நபியின் வாழ்வில் அல்குர்ஆன் தொடர்பான ஆச்சரியமான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அது பற்றிய தனியான பகுதி பின்னர் தரப்படுகின்றது.

**லைலத்துல் கத்ரை அடைய முயற்சித்தல்.**

இவ்விரவில்தான் அல்குர்ஆனின் இறக்கத்தின் தொடக்கம் இருந்தது.

شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ (البقرة١٨٥)

ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேரியவழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்தறிவிக்கும் அல்குர்ஆன் இறக்கி அருளப்பட்டது. (அல்பகரா: 185)

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةِ الْقَدْرِ (١) وَمَا أَدْرَاكَ مَا لَيْلَةُ الْقَدْرِ (٢) لَيْلَةُ الْقَدْرِ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ

(القدر١–٣)

நிச்சயமாக நாம் இதனை (அல்குர்ஆனை) மகத்துவமிக்க (புனித) இரவில் இறக்கிவைத்தோம். (நபியே!) லைலத்துல் கத்ர் என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? அது ஆயிரம் மாதங்களை விடவும் சிறந்ததாகும். (அல்கத்ர்-:1-3)

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةٍ مُبَارَكَةٍ إِنَّا كُنَّا مُنْذِرِينَ (٣) فِيهَا يُفْرَقُ كُلُّ أَمْرٍ حَكِيمٍ) الدخان : ٣ ، 4)

நிச்சயமாக நாம் இந்தக்குர்ஆனை அருள்பாலிக்கப்-பட்டதோர் இரவில் இறக்கி வைத்தோம். (இதன் மூலம்) நிச்சயமாக நாம் எச்சரிக்கை செய்பவர்களாக இருக்-கின்றோம். அந்த இரவில்தான் தீர்க்கமான ஒவ்வொரு காரியமும் முடித்துவைக்கப்படுகின்றன. (அத்துகான்: 3-4)

அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட இரவை அல்குர்ஆன் “லைலத்துல் கத்ர்” “மகத்துவமான இரவு” “அல்லைலத்துல் முபாரகா” “அருள்பாலிக்கப்பட்ட இரவு” என அழைக்கின்றது.

அவ்விரவு ரமளானின் இறுதிப்பத்தில் வரும் ஒற்றைப்-படையான இரவு ஒன்றில் இருப்பதாக நபி நாயகம் (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே அதன் பயனை அடைந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

## லைலத்துல் கத்ர் ரமளான் 27வது இரவில் மாத்திரமா ?

நமது பிரதேச முஸ்லிம்கள் ரமளான் 27 ஆம் இரவில் மாத்திரம் “லைலத்துல்கத்ர்” வேண்டி மார்க்கம் அனுமதித்ததும், அனுமதிக்காததுமான பலகிரிகைகளில் ஈடுபடும் வழக்கமுடையோராாய் இருக்கின்றனர்.

தமது செயலுக்கு பின்வரும் நபிமொழியை தவறாக புரிந்து கொண்டு, அதனை ஒரு ஆதாரமாகவும் முன்வைக்கின்றனர்.

அதாவது: நபித்தோழர்களில் சிலரது கனவில் (ரமளானின்) கடைசி ஏழு இரவுகளில் ஒன்றில் “லைலத்துல் கத்ர்” காண்பிக்கப்பட்டது. அது பற்றி நபி (ﷺ) அவர்களிடம் கூறிய போது கடைசி ஏழு (இரவு)களில் ஒன்றில் உங்கள் கனவு ஒத்திருப்பதை காண்கின்றேன், ஆகவே அதனை தேடுபவர் (ரமளானில்) கடைசி ஏழு (இரவு)களில் ஒன்றில் தேடிக்கொள்ளட்டும் எனக் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

عَنْ عَائِشَةَ، رَضِيَ اللَّهُ عَنْهَا، أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم قَالَ: تَحَرَّوْا لَيْلَةَ الْقَدْرِ فِي الْوِتْرِ مِنَ الْعَشْرِ الأَوَاخِرِ مِنْ رَمَضَانَ ((أخرجه البخاري))

ரமளானில் வரும் ஒற்றைப்படையான நாட்களில் லைலத்துல் கத்ரை அடைய முயற்சி செய்யுங்கள் என நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள் (புகாரி)

மேற்படி நபிமொழிகளிலோ, அது போன்ற கருத்தில் அமைந்த வேறு நபிமொழிகளிலோ 27-ஆம் நாளில்தான் "லைலத்துல் கத்ர்" உண்டு என்பதற்கு உறுதியான எந்த விதமான ஆதாரமும் கிடையாது.

ஏனெனில் நபித் தோழர்களின் கனவிற்கு விளக்கமளித்த நபி (ﷺ) அவர்கள் பிந்திய 27-ம் இரவில் அது அவ்வாண்டு நிகழ்ந்தமையால்தான் அவ்வாறு விளக்க-மளித்தார்களே அன்றி, மாற்றமாக 27-ஆம் இரவுகளில் மாத்திரம் தேடும்படியோ, அல்லது வருடா, வருடம் அதில் நிகழுமென்றோ கூறவில்லை.

"லைலத்துல்கத்ர்" இரவு 27-ஆம் நாளில் மாத்திரம் இருக்குமாக இருந்தால் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள ஒரு வருடம் 21-ஆம் நாள் இரவில் காண்பிக்கப்பட்டார்கள். (புகாரி),

மேலும் ஸஹாபாக்கள் ஒற்றைப்படையான, மாறுபட்ட பல இரவுகளில் கனவில் வெவ்வேறுவிதமாக காண்பிக்கப்-பட்டிருக்கின்றார்கள்.

"லைலத்துல்கத்ர்" 27ஆம் நாளில் மாத்திரமே வரும் என்ற வாதம் பல நபி மொழிகளுக்கு முரணான வாதமாக இருப்பதுடன், சில வேளை அவ்விரவு கடந்த ஒற்றைப்படையான இரவுகளில் நிகழவும் சாத்தியமுண்டு. அதனால் 27- வது இரவில் தேடும் சகோதரர்களுக்கு அது தவறிவிடவும் வாய்ப்புள்ளது.

## லைலத்துல் கத்ர் எல்லா வருடமும் உண்டு

புனித “லைலத்துல் கத்ர்” இரவு வருடந்தோறும் வரும் ரமளானின் இறுதிப்பத்தின், ஒற்றைப்படையான இரவு ஒன்றில் நிகழ்வதால்தான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் “இ.்.திகா.்.ப்” வணக்கத்தில் ஈடுபட்டு அதனை அடைந்து-கொள்ள முயற்சித்துள்ளார்கள் என்ற ஆதாரபூர்வமான நபிமொழிகளை கவனித்தால் அவ்விரவு வருடா, வருடம் வருகின்றது என்ற உண்மையினை அறியலாம்.

## பெண்களுக்கும் இ.்.திகா.்.ப்

இவ்வணக்கத்தில் பெண்களும் ஈடுபாடு காட்டலாம் என்பதை பின்வரும் நபி மொழி உறுதிப்படுத்துகின்றது.

عَنْ عَائِشَةَ – رضى الله عنها – أَنَّ النَّبِىَّ –صلى الله عليه وسلم– كَانَ يَعْتَكِفُ الْعَشْرَ الأَوَاخِرَ مِنْ رَمَضَانَ حَتَّى تَوَفَّاهُ اللَّهُ عَزَّ وَجَلَّ ثُمَّ اعْتَكَفَ أَزْوَاجُهُ مِنْ بَعْدِهِ. (متفق عليه)

நபி (ﷺ) அவர்கள் மரணிக்கும் வரை ரமளானின் கடைசிப் பத்து நாட்களில் இ.்.திகா.்.ப் இருப்பவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பின் அவர்களின் மனைவிமார்கள் இ.்.திகா.்.ப் இருந்தனர். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்) வேறு சில அறிவிப்புக்களில் நபி (ﷺ) அவர்களின் காலத்திலும் அவர்களது மனைவியர் இ.்.திகா.்.பில் ஈடுபட்டுள்ளனர் என இடம் பெற்றுள்ளது.

பெண்கள் பள்ளிவாசல்களில் தொழுவதை தடை செய்யும் நமது சமுதாயம் அவர்கள் இ.்.திகா.்.பில் ஈடுபடுவதை எதிர்த்துப் போராடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## விஷேட ஆர்வம் காட்டல்.

ரமளான் இறுதிப்பத்தை அடையும் போது நபி (ﷺ) அவர்களால் அதற்காக காட்டப்பட்ட ஆர்வமும், அவர்களால் வழங்கப்பட்ட அழுத்தமும் ரமளானின் இறுதிப்பத்தின் சிறப்புக்களை வலியுறுத்தப் போதுமான சான்றாகும்.

عنْ عَائِشَةَ، رَضِيَ اللهُ عَنْهَا، قَالَتْ كَانَ النَّبِيُّ صلى الله عليه وسلم إِذَا دَخَلَ الْعَشْرُ شَدَّ مِئْزَرَهُ وَأَحْيَا لَيْلَهُ وَأَيْقَظَ أَهْلَهُ (أخرجه البخاري)

ரமளானின் இறுதிப் பத்து நாட்கள் நுழைந்துவிட்டால் நபி (ﷺ) அவர்கள் இல்லறத் தொடர்பை நிறுத்திக் கொள்வார்கள். இரவை (அல்லாஹ்வை வணங்கி) உயிர்ப்பிப்பார்கள். (அதற்காக) தமது குடும்பத்தினரையும், (உறக்கத்திலிருந்து) எழுப்பிவிடுவார்கள். (புகாரி).

நபி (ﷺ) அவர்கள் ரமளானின் இறுதிப்பத்து நாட்களுக்கும் (அல்லாஹ்வை வணங்குவதற்காக) எடுத்துக் கொள்ளும் சிரத்தை போன்று அதல்லாத ஏனைய மாதங்களுக்கு எடுத்துக்கொள்வதில்லை. (ஆதாரம்: திர்மிதி) இதன்மூலம் ரமளானின் இறுதிப் பத்து நாட்களுக்கு நபி (ﷺ) அவர்களால் வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

## வீண் சர்ச்சைகளைத் தவிர்த்தல்.

வீண்விதண்டாவாதங்கள் எப்போதும் தேவையற்றவையாக இருப்பினும் ரமளானில் அது முற்றிலும் தடுக்கப்பட்டாக வேண்டும். அதனால் ஒரு முஸ்லிம் “லைலத்துல்கத்ர்” இரவின் பாக்கியத்தை இழக்க நேரிடும் என நபி (ﷺ) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم خَرَجَ يُخْبِرُ بِلَيْلَةِ الْقَدْرِ فَتَلاَحَى رَجُلاَنِ مِنَ الْمُسْلِمِينَ فَقَالَ إِنِّي خَرَجْتُ لأُخْبِرَكُمْ بِلَيْلَةِ الْقَدْرِ وَإِنَّهُ تَلاَحَى فُلاَنٌ وَفُلاَنٌ فَرُفِعَتْ وَعَسَى أَنْ يَكُونَ خَيْرًا لَكُمُ الْتَمِسُوهَا فِي السَّبْعِ وَالتِّسْعِ وَالْخَمْسِ (أخرجه البخاري)

நபி (ﷺ) அவர்கள் லைலத்துல் கத்ர் பற்றி அறிவிப்பதற்காக வெளியேறிச் சென்ற வேளை இரண்டு முஸ்லிம்கள் கருத்து முரண்பட்டுக்கொண்டிருந்தனர். அப்போது நான் உங்களிடம் லைலத்துல் கத்ர் பற்றி அறிவிப்பதற்காக வெளியேறி வந்தேன். இன்னார், இன்னார் வீண் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். அதனால் அது உயர்த்தப்பட்டு விட்டது. அது உங்களுக்கு நன்மையாக இருக்கட்டும். அந்த இரவை (இருபத்தி) ஐந்து, (இருபத்தி) ஏழு, (இருபத்தி) ஒன்பதாம் இரவில் தேடுங்கள் எனக் கூறினார்கள். (புகாரி)

ஐக்கியமும், ஒற்றுமையும் லைலத்துல் கத்ரை அடைவதற்கான காரணிகளில் ஒன்றாக இருப்பதால் முஸ்லிம்கள் தமக்குள் காணப்டும் கருத்து வேறுபாடுகளை மறந்து, மகத்தான இவ்விரவு தமக்கும், பிற முஸ்லிம்களுக்கும் கிடைத்திட வழி செய்ய வேண்டும்.

## இ.்.திகா.்.ப் இருந்து முயற்சித்தமை

ரமளான் பகல் காலங்களில் நோன்பு நோற்கும் ஒருவர் முதல், மற்றும் இரண்டாவது பத்துவரையும் அதன் இரவு காலங்களில் மார்க்கம் அங்கீகரித்துள்ள வணக்க வழிபாடுகளில் தன்னை அர்ப்பணிப்பதன் மூலமும், மூன்றாவது பத்தில் இ.்.திகா.்.ப் இருப்பதன் மூலமும் லைலத்துல்கத்ரை அடைந்து கொள்ளலாம்.

நபி (ﷺ) அவர்கள் ரமளான் முழுவதும் ஓருவருடம் இ.ஃ.திகா.ஃ.ப் இருந்துள்ளார்கள். லைலத்துல் கத்ர் பின்பத்தில் ஒற்றைப்படையான இரவில் இருப்பது பற்றி இறுதியில்தான் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இருந்தும் அதை அடைந்து கொள்வதற்காக பிந்திய பத்தில் மீண்டும் இ.ஃ.திகா.ஃ.பில் இருந்துள்ளார்கள். (புகாரி)

அபூ ஸலமா என்ற தாபியீ அறிவிக்கின்றார்கள்: அபூ ஸயீத் அல்குத்ரி (ரழி) அவர்களிடம் சென்று இந்த பேரீச்ச மரத்தின் பக்கம் எம்மைக் கொஞ்சம் கூட்டிக் கொண்டு சென்று (நபி அவர்களின் இ.ஃ.திகா.ஃ.ப் பற்றி) எமக்கு அறிவிக்க வேண்டாமா? எனக் கேட்டேன். அத்துடன், லைலத்துல்கத்ர் பற்றி நபியிடம் நீங்கள் நேரடியாக செவிமடுத்ததையும் கூறுங்கள் என்றேன். அவர் கூறினார், நபி (ﷺ) அவர்கள் ரமளானின் முதல் பத்தில் இ.ஃ.திகா.ஃ.ப் இருந்தார்கள், நாமும் அவர்களுடன் இ.ஃ.திகா.ஃ.ப் இருந்தோம். ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து إِنَّ الَّذِي تَطْلُبُ أَمَـــامَـــك நீர் எதை வேண்டி இ.ஃ.திகா.ஃ.ப் இருக்கின்றீரோ அது உமக்கு முன்வரும் காலங்களில்தான் இருக்கின்றது எனக் கூறினார்கள். அதற்காக அவர்கள் நடுப்பத்தில் இ.ஃ.திகா.ஃ.ப் இருந்தார்கள். நாமும் அவர்களுடன் இ.ஃ.திகா.ஃ.ப் இருந்தோம். அவ்வாறே ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து إِنَّ الَّذِي تَطْلُبُ أَمَامَك நீர் எதை வேண்டி இ.ஃ.திகா.ஃ.ப் இருக்கின்றீரோ அது உமக்கு முன்வரும் காலங்களில்தான் இருக்கின்றது எனக் கூறினார்கள். ரமளானின் இருபதாம் அன்று காலை எழுந்து நபி (ﷺ) அவர்கள் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில்:

مَنْ كَانَ اعْتَكَفَ مَعَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَلْيَرْجِعْ فَإِنِّي أُرِيتُ لَيْلَةَ الْقَدْرِ وَإِنِّي نُسِّيتُهَا وَإِنَّهَا فِي الْعَشْرِ الْأَوَاخِرِ فِي وِتْرٍ (صحيح البخاري)

யார் நபி (ﷺ) அவர்களுடன் இஃதிகாப் இருந்தார்களோ அவர்கள் திரும்பிவரவும். ஏனெனில் நான் லைலத்துல் கத்ர் பற்றி காண்பிக்கப்பட்டேன். இருந்தும் அதை மறக்கடிக்கப்பட்டேன், நிச்சயமாக அது இறுதிப்பத்தில் ஒற்றைப்படையில்தான் இருக்கின்றது எனக் கூறினார்கள். (புகாரி).

ஒரு நோன்பாளி புனித லைலத்துல் கத்ரின் சிறப்பை அடைந்து கொள்ளும் பாக்கியம் பெற்றவனாக மாறினால் அதுவே மிகப்பெரும் பாக்கியமாகும். ஏனெனில்,

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ يَقُمْ لَيْلَةَ الْقَدْرِ إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ (صحيح البخاري)

யார் இறை நம்பிக்கையுடனும், நன்மை நாடியும் லைலத்துல் கத்ர் இரவில் நின்று வணங்குகின்றாரோ அவரது முந்திய பாவம் மன்னிக்கப்படும் என்று நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி).

லைலத்துல் கத்ர் இரவு ஷஃபான் மாதத்தில் இருப்பதாக பலவீனமான, ஆதாரமற்ற சில செய்திகளை அடிப்படை-யாகக் கொண்டு சிலர் இன்றும் பிரச்சாரம் செய்வதோடு, அதன் அடிப்படையில் பராஅத் என்ற பெயரில் நோன்பும் நோற்கின்றனர், ஆனால் அது ரமளானில் இருப்பதாக குர்ஆனிலும், நபி (ﷺ) அவர்களின் ஆதாரபூர்வமான பொன்மொழிகளிலும் கூறப்படும் நேரடியான செய்திக்கு நேர் மாற்றமானதாகும்.

... قال ابن كثير رحمه الله : ومن قال: إنها ليلة النصف من شعبان - كما روي عن عكرمة -فقد أبعد النَّجْعَة فإن نص القرآن أنها في رمضان (تفسير ابن كثير)

யார் அது (லைலத்துல்கத்ர்) ஷ.்.பானின் அரைவாசியில் இருப்பதாக குறிப்பிடுகின்றாரோ அவர் வழியைத் தூரப்படுத்திக் கொண்டவர். - உதராணமாக இக்ரிமாவைத் தொட்டும் அறிவிக்கப்பட்டிருப்பதைப் போல - அவ்வாறன்று, நிச்சயமாக அது ரமளானில்தான் உள்ளது என்பது குர்ஆனின் நேரடியான சான்றாகும். (பார்க்க: இப்னு கஸீர்) என்பது இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்களின் தெளிவான வாதமாகும்.

இதையும் மறுத்தே நம்மில் பலர் ஷ.்.பானில் பராஅத் கொண்டாடுகின்றனர். ஆலிம் உலமாக்கள் ஆதாரமற்ற ஹதீஸ்களை ஆதாரமாக எண்ணி, ஆதாரமில்லாமல் சொல்வதை பொதுமக்கள் மார்க்கமாக எண்ணி, அதன் உண்மை நிலை பற்றி அறியாது நோன்பும் நோற்கின்றனர். இந்த வழிமுறை கண்டிக்கத்தக்க வழிமுறையாகும்.

## லைலத்துல் கத்ரின் துஆ

அன்னை ஆயிஷா (ﷺ) அவர்கள் நபி (ﷺ) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! புனித லைலத்துல் கத்ரை (அதன் அடையாளங்களைக் கொண்டு) நான் அறியும் தருணத்தில் எவ்வாறு பிரார்த்தனை செய்ய வேண்டும்? என வினவியபோது

اَللّٰهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّيْ (سنن الترمذي)

“அல்லாஹும்ம இன்னக அفபுவ்வுன் துஹிப்புல் அفப்வ ஃப.ؘ.فபு அன்னீ ”

பொருள்:- அல்லாஹ்வே! நீ (பாவங்களை) மன்னிப்பவன். என்னை மன்னித்து விடுவாயாக! என பிரார்த்தனை செய்வாயாக என்று பதிலளித்தார்கள் (ஆதாரம்: திர்மிதி).

## கியாமுல்லைல் வணக்கம்

ரமளான் காலத்திற்கென விசேடமான தொழுகை வணக்கத்தை நபி (ﷺ) அவர்கள் செய்யவில்லை. மாற்றமாக அவர்கள் தினம்தோறும் வழமையாகச் செய்து வந்த பதினொரு ரகஅத்துக்களையும் இம்மாதத்தில் நடைமுறைப்-படுத்தினார்கள்.

அதில் ஸஹாபாப் பெருமக்களும் கலந்து நிறைவேற்றி-னார்கள். நபி (ﷺ) அவர்கள் அதைத் தடுக்கவில்லை. அதுவும் மூன்று இரவுகள்தான் அதற்கான ஜமாஅத் (கூட்டுத்) தொழுகை நடைபெற்றிருக்கின்றது என்பதை புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட பல ஹதீஸ் கிரந்தங்களில் காணமுடிகின்றது.

عَنْ أَبِي سَلَمَةَ بْنِ عَبْدِ الرَّحْمَنِ أَنَّهُ أَخْبَرَهُ أَنَّهُ سَأَلَ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا كَيْفَ كَانَتْ صَلَاةُ رَسُولِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي رَمَضَانَ فَقَالَتْ مَا كَانَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَزِيدُ فِي رَمَضَانَ وَلَا فِي غَيْرِهِ عَلَى إِحْدَى عَشْرَةَ رَكْعَةً يُصَلِّي أَرْبَعًا فَلَا تَسَلْ عَنْ حُسْنِهِنَّ وَطُولِهِنَّ ثُمَّ يُصَلِّي أَرْبَعًا فَلَا تَسَلْ عَنْ حُسْنِهِنَّ وَطُولِهِنَّ ثُمَّ يُصَلِّي ثَلَاثًا قَالَتْ عَائِشَةُ (متفق عليه)

அபூஸலமா என்ற மதீனா தாபியீன்களில் ஒருவர் கூறுகின்றார்: அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் ரமளானில் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் தொழுகை எவ்வாறு இருந்தது என அவர் கேட்ட போது ரமளானிலோ, அதல்லாத காலத்திலோ பதினொரு ரகஅத்துகளுக்கு மேல் அவர்கள் அதிகரித்ததில்லை. நான்கு (ரகஅத்) தொழுவார்கள் அதன் அழகையோ, அதன் நீளத்தைப் பற்றிக் கேட்காதே (அவ்வளவு அருமையான தொழுகை) பின்பு நான்கு (ரகஅத்) தொழுவார்கள் அதன் அழகையோ, அதன் நீளத்தைப் பற்றிக் கேட்காதே (அவ்வளவு அருமையான தொழுகை) பின்னர் மூன்று தொழுவார்கள். எனப் பதில் அளித்தார்கள். (ஆதார நூல்கள்: புகாரி, முஸ்லிம்).

இது நான்கு நான்காக இந்தத் தொழுகையைத் தொழலாம் என்பதைக் குறிப்பிடுகின்றது. அதை இரண்டிரண்டாகவும் தொழலாம் என்பதை பின்வரும் செய்தி உறுதி செய்கின்றது.

ثُمَّ قَامَ إِلَى شَنٍّ مُعَلَّقَةٍ فَتَوَضَّأَ مِنْهَا فَأَحْسَنَ وُضُوءَهُ ثُمَّ قَامَ يُصَلِّي قَالَ ابْنُ عَبَّاسٍ فَقُمْتُ فَصَنَعْتُ مِثْلَ مَا صَنَعَ ثُمَّ ذَهَبْتُ فَقُمْتُ إِلَى جَنْبِهِ فَوَضَعَ يَدَهُ الْيُمْنَى عَلَى رَأْسِي وَأَخَذَ بِأُذُنِي الْيُمْنَى يَفْتِلُهَا فَصَلَّى رَكْعَتَيْنِ ثُمَّ رَكْعَتَيْنِ ثُمَّ رَكْعَتَيْنِ ثُمَّ رَكْعَتَيْنِ ثُمَّ رَكْعَتَيْنِ ثُمَّ رَكْعَتَيْنِ ثُمَّ أَوْتَرَ ثُمَّ اضْطَجَعَ حَتَّى أَتَاهُ الْمُؤَذِّنُ فَقَامَ فَصَلَّى رَكْعَتَيْنِ خَفِيفَتَيْنِ ثُمَّ خَرَجَ فَصَلَّى الصُّبْحَ (بخاري)

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது சிறிய தாயார் மைமூனா (ரலி) அவர்களின் வீட்டில் ஓரிரவு தங்கினேன். அப்போது நபி (ﷺ) அவர்கள் தமது குடும்பத்தாருடன் சிறிது நேரம் பேசிவிட்டு, பின் உறங்கினார்கள். இரவின் மூன்றில் ஒரு பகுதி கழிந்த பின்னர் எழுந்து அமர்ந்த வண்ணம் வானின் பக்கம் பார்த்த-வர்களாக “ஆலுஇம்ரான்” அத்தியாத்தில் இடம்பெறும்

“இன்ன (ஃப்)பீஹல்கிஸ் ஸமாவாத்தி வல் அர்ளி வஹ்திலா (ஃப்)பில்லைலி வன்னஹாரி லஆயாதின் லிவுலில் அல்(ப்)பாப்” என ஆரம்பிக்கும் 190 வது வசனத்தில் இருந்து இறுதிப்பத்து வசனம் வரை ஓதினார்கள். பின்னர் அங்கு தொங்க வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பாத்திரத்தின் பக்கமாக எழுந்து சென்று உழூ செய்தார்கள், அதனை நன்றாகவும் செய்தார்கள். இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகிறார்கள்: நானும் அவர்கள் செய்தததது போன்றே செய்தேன். பின்பு அவர்களின் (இடது) பக்கமாகச் சென்று நின்றேன். அவர்களது வலது கையை எனது தலைமீது வைத்து, எனது வலதுகாதைப் பிடித்து இழுத்து (என்னை அவர்களின் வலது புறமாக நிறுத்தினார்கள்) இரண்டு ரகஅத் தொழுதார்கள். பின்னர் இரண்டு ரகஅத் தொழுதார்கள். பின்னர், இரண்டு ரகஅத் தொழுதார்கள். பின்பு, இரண்டு ரகஅத் தொழுதார்கள், பின்னர் இரண்டு ரகஅத் தொழுதார்கள். பின்னர், இரண்டு ரகஅத் தொழுதார்கள். பின்பு வித்ர் செய்தார்கள். பின்னர் முஅத்தின் வரும் வரை சற்று சாய்ந்து உறங்கினார்கள். (அதான் கூறப்பட்ட பின்) சுருக்கமாக இரண்டு ரகஅத் தொழுதார்கள். (இகாமத் கூறப்பட்ட) பின்னர் சென்று சுபஹ் தொழுகை நடத்தினார்கள் (ஆதார நூல் புகாரி)

## இருபது ரகஅத்துக்கள் நபிவழியா ?

சிலர் இருபது ரகஅத்துக்கள்தாம் நபிவழி, பதினொரு ரகஅத்துக்களோ, பதின் மூன்று ரகஅத்துக்களோ நபிவழி அல்ல. அது புதுவழி போன்ற பிரச்சாரத்தை முன்னெ-டுப்பதோடு, இருபது ரகஅத்துக்களைக் கொண்டு உமர் (ரழி) அவர்கள் தொழுகை நடத்தியதாகவும் ஆதாரம் வேறும் காண்பித்து இருபதுதான் தொழ வேண்டும் என வாதிடுகின்றனர். ஆனால் உமர் (ரழி) அவர்கள் பதினொரு ரகஅத்துக்கள் தொழுவிக்கும்படி கூறியதாகவே ஆதார-பூர்வமான செய்தி இருக்கின்றது.

عَنْ السَّائِبِ بْنِ يَزِيدَ أَنَّهُ قَالَ أَمَرَ عُمَرُ بْنُ الْخَطَّابِ أُبَيَّ بْنَ كَعْبٍ وَتَمِيمًا الدَّارِيَّ أَنْ يَقُومَا لِلنَّاسِ بِإِحْدَى عَشْرَةَ رَكْعَةً (موطأ)

உமர் பின் கத்தாப் (ﷺ) அவர்கள் உபை இப்னு க.ஃ.ப் (ﷺ) அவர்களையும், தமீமுத்தாரி (ﷺ) அவர்களையும் மக்களுக்கு பதினொரு ரகஅத்துக்கள் தொழுவிக்கும்படி ஏவினார்கள். (ஆதார நூல்: முவத்தா மாலிக்) இது முவத்தாவில் ஆதாரபூர்வமான அறிவிப்பாக இடம் பெற்றுள்ளது.

இது பற்றி விளக்குகின்ற இமாம் சுயூதி (ரஹ்) அவர்கள் :

قال الباجي لعل عمر أخذ ذلك من صلاة النبي صلى الله عليه و سلم ففي حديث عائشة انها سئلت عن صلاته في رمضان فقالت ما كان يزيد في رمضان ولا في غيره على إحدى عشرة ركعة

(تنوير الحوالك - (١/١٠٥)

உமர் (ரழி) அவர்கள், நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் தொழுகையில் இருந்து மேற்படி விளக்கத்தினை பெற்றிருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் ரமளானில் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் தொழுகை எவ்வாறு இருந்தது எனக் கேட்கப்பட்ட போது ரமளானிலோ, ரமளான் அல்லாத காலத்திலோ பதினொரு ரகஅத்துகளுக்கு மேல் அவர்கள் அதிகப்படியாக தொழுததில்லை எனக் கூறியுள்ளார்கள் எனக் குறிப்பி-டுவதை ஷா.ஃ.பி மத்ஹப் ஆலிம்கள் சற்று சிந்திக்க வேண்டும்.

## 23 ரகஅத்துக்களை வலியுறுத்தும் மற்றொரு செய்தியின் நிலை?

عَنْ يَزِيدَ بْنِ رُومَانَ أَنَّهُ قَالَ كَانَ النَّاسُ يَقُــومُــونَ فِي زَمَانِ عُمَرَ بْنِ الْخَطَّابِ فِي رَمَضَانَ بِثَلَاثٍ وَعِشْرِينَ رَكْعَةً (موطأ)

ரமளானில் உமர் (ﷺ) அவர்களின் காலத்தில் ‘‘மக்கள் இருபத்தி மூன்று ரகஅத்துக்கள் தொழுபவர்களாக இருந்தார்கள்’’ என யஸீத் பின் ரூமான் என்பவர் வழியாக அறிவிக்கப்பட்டும் செய்தியை ஆதாரமாகக் கொண்டு சிலர் இருபத்தி மூன்று ரகஅத்தை நியாயப்படுத்துகின்றனர்.

இந்தச் செய்தியின் தரத்தை ஆய்வு செய்த ஹதீஸ்கலை அறிஞர்கள் அதில் இடம் பெறும் “யஸீத் பின் ரூமான்” என்பவர் உமர் (ரழி) அவர்களைச் சந்திக்காத காரணத்தால் அது “முன்கதி.ஃ.” அறிவிப்பாளர் தொடர்பு அறுந்த, ஆதாரத்திற்கு கொள்ள முடியாத செய்திகளில் ஒன்று எனத் தீர்ப்புக் கூறியுள்ளனர்.

இக்கருத்தினை உறுதி செய்துள்ள ஷாபிஈ மத்ஹபின் தலை சிறந்த அறிஞர்களில் ஒருவரான இமாம் நவவி அவர்கள் தனது “அல்மஜ்மூ.ஃ.” (பாகம்: 4- பக்கம்: 33)ல்

"رواه البيهقي، ولكنه مرسل. فإن يزيد بن رومان لم يلق عمر" இந்தச் செய்தியினை இமாம் பைஹகி (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ள போதிலும் அது “முர்ஸல்” ஆதாரத்திற்கு கொள்ள முடியாத வகை சார்ந்ததாகும். (அதாவது - தாபியீ ஒருவர் அல்லாஹ்வின் தூதர் சொன்னதாகக் குறிப்பிடும் நம்பகமற்ற செய்தியாகும்) ஏனெனில் “யஸீத் பின் ரூமான்” அவர்கள் உமர் (ﷺ) அவர்களைச் சந்திக்கவில்லை எனக் குறிப்பிடுகிறார்கள்.

**மத்திபமான நிலையைப் பேணியமை.**

ஆன்மீகம் சார்ந்த வணக்கங்கள் மனித வாழ்வில் மேம்பாட்டினையும், உள அமைதியையும் தரவல்ல சக்திமிக்க வழிமுறைகளாகும். அவற்றை நாம் அளவோடும், திருப்திகரமாகவும் செய்கின்ற போது அதன் பிரதிபலிப்பை நமது வாழ்வில் உணர முடியும். எல்லை மீறி வணங்க வேண்டும் என்ற வழிமுறை முற்றிலுமாக தடுக்கப்பட்டதாகும்.

(மஸ்ஜிதுன் நபவி) பள்ளியில் நபி (ﷺ) அவர்கள் நுழைந்தார்கள். இரு தூண்களுக்கிடையில் கயிறு ஒன்று கட்டப்பட்டிருந்ததைக் கண்டார்கள். இது என்ன எனக் கேட்டார்கள். இது ஸைனப் (நபி அவர்களின் மனைவி) அவர்களின் கயிறு என்று கூறப்பட்டது. அவர்கள் தொழுவார்கள், சோர்வு ஏற்பட்டால், அல்லது உட்சாகத்தை இழந்தால் அதைப்பிடித்துக் கொண்டு வணங்குவார்கள் என மக்கள் கூறினர். அதை உடனே அவிழ்த்து விடுங்கள். உங்களில் ஒருவர் தனது உட்சாக நேரத்தில் (உபரியான இது போன்ற வணக்கத்தை) வணங்கிக் கொள்ளட்டும். உடம்பில் சோர்வு, அல்லது மனதில் நாட்டமின்மை அவருக்கு ஏற்பட்டால் அவர் உடனே அமர்ந்து கொள்ளட்டும் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).

சிலர் ரமாளன் காலங்களில் கொட்டாவி விட்டுக்-கொண்டும், அலட்சியமாகவும் வணங்குவதை அவதானிக்க முடிகின்றது. எனவே அது சீர் செய்யப்படல் வேண்டும்.

## ஸஹர் வேளையில் பாவமன்னிப்புக் கோரலும், பிரார்த்தனையில் ஈடுபடுதலும்.

இது மகத்துவமிக்கதோர் நேரமாகும். ரமளான், ரமளான் அல்லாத காலங்கள் என்ற வேறுபாடின்றி இதன் சிறப்பு பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்து. இந்த நேரத்தில் அல்லாஹ்விடம் இறைஞ்சி, இரு கரம் ஏந்தி பாவமன்னிப்புக் கோருவது நமது கடமையாகும்.

كانوا قليلا من الليل ما يهجعون وبالاسحارهم يستغفرون (الذاريات:-١٨)

நிச்சயமாக இறையச்சமுடையோர் தமது இரட்சகன் வழங்கியவைகளைப் பெற்று சுவனங்களிலும் நீரூற்று-களிலும் இருப்பர். இவர்கள் இதற்கு முன்னர் நன்மை செய்வோராக இருந்தனர். மேலும் இரவில் குறைவாக உறங்குவோராகவும், ஸஹர் வேளையில் பாவமன்னிப்பு வேண்டுவாராகவும் இருந்தனர். (அத்தாரியாத்: 18)

والمستغفرين بالاسحار (آل عمران١٧) (நல்லடியார்களான அவர்கள்) ஸஹர் வேளையில் இறை மன்னிப்பை வேண்டுவோராகவும் (இருப்பார்கள்) (ஆலுஇம்ரான்: 17).

## தஸ்பீஹ் தொழுகை ???

இவ்வாறானதொரு தொழுகையை ரமளான் காலங்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் தொழுகின்றனர். சிலர் இருபத்தி ஏழாவது இரவில் தொழுகின்றனர். இதற்கு ஆதாரம் இல்லை என்று இமாம்களான நவவி, இப்னு ஹஜர் (ரஹ்) போன்ற இமாம்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த அறிஞர்கள் ஷா.ஃபிஈ மத்ஹபைச் சார்ந்தோரும் ஏற்றுக் கொள்ளும் அறிஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர்களின் மூல நூல்களில் இருந்து அதன் மொழி பெயர்ப்புடன் இங்கு தரப்படுகின்றது. தீர்ப்பு உங்கள் கரங்களில் விடப்படுகின்றது.

قال القاضي حسـين وصاحبا التهذيب والتتمة والروياني في اواخر كتاب الجنائز من كتابه البحر يســتحب صلاة التســـبيح للحديث الوارد فيها **وفي هذا الاستحباب نظر لان حديثها ضعيف وفيها تغيير لنظم الصلاة المعروف فينبغي الا يفعل بغير حديث وليس حديثها بثابت ...**

(( مسائل تتعلق بباب صلاة التطوع)) المجموع شرح المهذب - (ج ٤ / ص ٥٤)

தஸ்பீஹ் தொழுகை பற்றி குறிப்பிடும் அறிஞர் காழி ஹுஸைன், "தஹ்ஸீப்" மற்றும் ததிம்மா என்ற இரு நூற்களின் அறிஞர்களும், அர்ரவ்யானி என்ற அறிஞர் தனது "அல்பஹ்ர்" என்ற நூலில் ஜனாஸா அத்தியாயத்தின் இறுதிப்பகுதியிலும் தஸ்பீஹ் தொழுகை பற்றி ஹதீஸ் வந்துள்ளதால் அது சுன்னத்தான தொழுகை எனக் குறிப்பிடுகின்றனர், எனக் குறிப்பிடும் இமாம் நவவி (ரஹ்) அவர்கள்:

இந்த தொழுகை சுன்னத் எனக் குறிப்பிடுவதை சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் அது பற்றிய ஹதீஸ் பலவீனமானதாக இருப்பதுடன், பொதுவாக அறியப்பட்ட தொழுகைகளின் ஒழுங்கமைப்பிற்கு அது மாற்றமான-தாகவும் இருக்கின்றது. எனவே (ஒரு செயலுக்கு) ஹதீஸ் இல்லாமல் இருக்கின்ற போது அதை செய்யாதிருப்பது அவசியமாகும். அதற்கான ஹதீஸும் ஆதாரபூர்வமானதாக இல்லை. (ஆதார நூல்: அல்மஜ்மூஃ. பாகம்: 4: பக்கம்: 54).

அல்மஜ்மூஃ. பாகம்: 4: பக்கம்: 55ல் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில் "தஸ்பீஹ்" தொழுகை பற்றி நபி (ﷺ) அவர்களைத் தொட்டும் பல ஹதீஸ்கள் இருந்தாலும் அது சரியானது கிடையாது." எனக் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கின்றோம்.

“தஸ்பீஹ்” தொழுகை பற்றி அபூபக்கர் இப்னுல் அரபி, மற்றும் இப்னுல் ஜவ்ஸி போன்ற அறிஞர்களின் நிலைப்பாடு பற்றி தெளிவுபடுத்திய பின்னர் இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

... وَالْحَقُّ أَنَّ طُرُقَهُ كُلَّهَا ضَعِيفَةٌ . وَإِنْ كَانَ حَدِيثُ ابْنِ عَبَّاسٍ يَقْرُبُ مِنْ شَرْطِ الْحَسَنِ ؛ إِلَّا أَنَّهُ شَاذٌّ لِشِدَّةِ الْفَرْدِيَّةِ فِيهِ ، وَعَدَمِ الْمُتَابِعِ وَالشَّاهِدِ مِنْ وَجْهٍ مُعْتَبَرٍ ، وَمُخَالَفَةِ هَيْئَتِهَا لِهَيْئَةِ بَاقِي الصَّلَوَاتِ . .

التلخيص الحبير في تخريج أحاديث الرافعي الكبير - (ج ٢ / ص ، ٩١،٩٠)

“அது பற்றி வந்திருக்கும் ஹதீஸ் அறிவிப்பாளர்கள் வழிகள் அனைத்தும் பலவீனமானது என்பதே உண்மையாகும். இப்னு அப்பாஸ் (ﷺ) அவர்களைத் தொட்டும் வரும் செய்தி “ஹஸன்” என்ற தரத்திற்கு நெருக்கமாக இருந்த போதிலும் தனிமையாக அறிவித்திருப்பது அங்கீகரிக்க முடியாத கடுமையான தனிமையாக இருப்பதாலும், அதாவது (பல நம்பகமானவர்களுக்கு மாற்றமாக ஒரு நம்பகமான தனித்து அறிவிப்பதாலும்) ஏற்றுக் கொள்ள முடியுமான அமைப்பில் (முதாபி.ஃ., மற்றும் ஷாஹித்) (அதாவது அடிப்படையாக அறிவிப்பாளரைப் பலப்படுத்தும் வேறு அறிவிப்பாளர் ஊடாகவோ), அல்லது (மற்றொரு ஸஹாபி வழியான அறிவிப்போ) இல்லாததாலும், மேலும் அதன் அமைப்பு ஏனைய தொழுகைகளின் அமைப்புக்கு மாற்றமாக இருப்பதாலும் அது “ஷாத்” (ஏற்றுக் கொள்ள முடியாத பலவீனமான) வகையைச் சேர்ந்ததாகும். எனக் குறிப்பிட்-டுள்ளார்கள்.

## முழுக் குர்ஆனையும் ஓதி ஒரே இரவில் தொழுவிப்பது நபிவழியா ?

பிந்திய பத்தில் முழுக்குர்ஆனையும் ஒரே இரவில் தமாம் செய்தோம், நான்கு ஹாபிழ்கள் அதில் ஈடுபடுத்தப்பட்டனர் போன்ற பேச்சுக்கள் கேட்பதற்கு ஆர்வத்தை தூண்டுவது போன்று இருந்தாலும் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அல்குர்ஆன் கத்ம் செய்வதற்கென வகுத்தளித்த வழிமுறைக்கு அது நெருக்கமானதாக இருக்க வாய்ப்பில்லை என்பதை பின்வரும் நபிமொழி மூலம் அறிய முடிகின்றது.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو - رضى الله عنهما - قَالَ قَالَ لِى رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- « اقْرَإِ الْقُرْآنَ فِى كُلِّ شَهْرٍ ». قَالَ قُلْتُ إِنِّى أَجِدُ قُوَّةً. قَالَ « فَاقْرَأْهُ فِى عِشْرِينَ لَيْلَةً ». قَالَ قُلْتُ إِنِّى أَجِدُ قُوَّةً. قَالَ « فَاقْرَأْهُ فِى سَبْعٍ وَلاَ تَزِدْ عَلَى ذَلِكَ ». (متفق عليه)

அப்துல்லாஹ் பின் அம்று (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் என்னிடம் நீ அல்குர்ஆனை ஒரு மாதத்தினுள் ஓதி (முடித்து)க்கொள் என்றார்கள். நான் அதற்கு மேலும் (ஓத) வலிமை உள்ளவனாக இருக்கின்றேன் என்றேன். இருபது இரவுகளில் ஓதி முடித்துக் கொள் என்றார்கள். அதற்கு மேலும் (ஓத) வலிமை உள்ளவனாக இருக்கின்றேன் என்றேன். ஏழு நாட்களுக்குள் முடித்துக் கொள் அதைவிட அதிகப்படியாக்கி (குறைத்து)க் கொள்ளாதே என்றார்கள் (புகாரி, முஸ்லிம்)

மேற்படி நபிமொழியின் போதனைக்கு நேர்மாற்றமாக முழு இரவிலும் குர்ஆனைத் தமாம் செய்கின்ற சகோதரர்களின் தொழுகைமுறை அமைவதாகவே நம்மால் விளங்க முடிகின்றது.

## ஸகாத்துல் பித்ர் கொடுத்தல்.

இதுவம் நபி (ﷺ) அவர்கள் கடைப்பிடித்த கட்டாய வழிமுறைகளில் ஒன்றாகும். பெருநாள் தின செலவுகள் போக மீதமிருக்கும் அரிசி, தயிர், வெண்ணை, பேரீத்தம் பழங்கள் ஆகியவற்றில் ஆண்கள், பெண்கள், அடிமை, சுதந்திரமானவர், சிறுவர், பெரியர் என்ற வேறுபாடின்றி அனைவருக்குமாகவும் பெருநாள் தொழுகைக்குச் செல்வதற்கு முன்னால் வழங்கப்பட்டு வந்த முக்கிய தர்மமாகும்.

عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ فَرَضَ رَسُــــولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ زَكَاةَ الْفِطْرِ صَاعًا مِنْ تَمْرٍ أَوْ صَاعًا مِنْ شَعِيرٍ عَلَى الْعَبْدِ وَالْحُرِّ وَالذَّكَرِ وَالْأُنْثَى وَالصَّغِيرِ وَالْكَبِيرِ مِنْ الْمُسْلِمِينَ وَأَمَرَ بِهَا أَنْ تُؤَدَّى قَبْلَ خُرُوجِ النَّاسِ إِلَى الصَّلَاةِ (متفق عليه)

பேரீத்தம் பழத்தில் இருந்து ஒரு ஸாவு அளவை, அல்லது தொலிக் கோதுமையில் இருந்து ஒரு ஸாவு அளவை முஸ்லிம்களில் உள்ள அடிமை, சுதந்திரமானவன், ஆண், பெண், சிறியவர், பெரியர் ஆகியோர் எல்லோர் மீதும் ஸகாத்துல் ஃபித்ரை நபி (ﷺ) அவர்கள் கடமையாக்கினார்கள். மேலும், அதை மக்கள் (பெருநாள்) தொழுகைக்குச் செல்வதற்கு முன்னர் வழங்கும்படியும் பணித்தார்கள். (புகாரி, முஸ்லிம்). ஒரு சில அறிவிப்புக்களில் காய்ந்த திராட்சையிலும், தயிரிலும் ஒரு ஸாவு அளவு என்று இடம் பெற்றுள்ளது. ஒரு ஸாவு அளவு என்பது இரண்டு கிலோ, நானூறு கிராம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் மக்கள் பசியைப் போக்குவதற்குப் பயன்படுத்தப்படும் உணவுவகைகள் இங்கு விநியோகம் செய்யப்பட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம். பொதுவாக நாட்டில் அரிசியைக் கொடுக்கும் வழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. மாவுகூட கொடுக்கமுடியும் என்பதை இந்தச் செய்தி உணர்த்துகின்றது. (அல்லாஹ் மிக அறிந்தவன்)

## யாரிடம் கையளிக்க வேண்டும்.

ஒரு ஊரில் வாழ்கின்ற ஏழை, எழிய மக்களுக்கு ஸகாத்துல் ஃபித்ர் விநியோகிக்கப்படுவதை நபி (ﷺ) அவர்கள் வலியுறுத்தி இருக்கின்றார்கள்.

عَنْ ابْنِ عَبَّاسٍ قَالَ فَرَضَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ زَكَاةَ الْفِطْرِ طُهْرَةً لِلصَّائِمِ مِنْ اللَّغْوِ وَالرَّفَثِ وَطُعْمَةً لِلْمَسَاكِينِ مَنْ أَدَّاهَا قَبْلَ الصَّلَاةِ فَهِيَ زَكَاةٌ مَقْبُولَةٌ وَمَنْ أَدَّاهَا بَعْدَ الصَّلَاةِ فَهِيَ صَدَقَةٌ مِنْ الصَّدَقَاتِ (سنن أبي داود)

ஒரு நோன்பாளி (தன்னால் ஏற்படுகின்ற) வீண், கேளிக்கைளில் இருந்து தூய்மை பெறவும், ஏழை எளிய மக்களுக்கு அது உணவாகவும் இருக்கும் பொருட்டு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் ஸகாத்துல் ஃபித்ரை கடமையாக்கினார்கள், யார் அதை தொழுகைக்கு முன்னால் நிறைவேற்றின்றாரோ அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸகாத் ஆகும். யார் அதை தொழுகைக்கு பின்னால் நிறைவேற்று-கின்றாரோ அது சாதாராண தர்மங்களில் ஒரு தர்மமாகும் எனக் கூறினார்கள். (அபூதாவூத்).

எனவே இந்தக்கடமை முஸ்லிம்களில் உள்ள ஏழைகளுக்கு சரியாக விநியோகிக்கப்படுவதும், பெருநாள் தொழுகைக்கு முன்னர் வழங்கப்படுவதும் அவசியமாகும்.

**பெருநாள் தொழுகையை திடலில் நிறைவேற்றுதல்.**

ஷவ்வால் மாதத்தின் தலைப்பிறை கண்ட பின் அடுத்த நாள் அதிகாலை நேரத்தில் திடலை நோக்கி முஸ்லிம்கள் அனைவரும் பெருநாள் தொழுகைக்காக புறப்பட வேண்டும்.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ قَالَ كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَخْرُجُ يَوْمَ الْفِطْرِ وَالْأَضْحَى إِلَى الْمُصَلَّى فَأَوَّلُ شَيْءٍ يَبْدَأُ بِهِ الصَّلَاةُ ثُمَّ يَنْصَرِفُ فَيَقُومُ مُقَابِلَ النَّاسِ وَالنَّاسُ جُلُوسٌ عَلَى صُفُوفِهِمْ فَيَعِظُهُمْ وَيُوصِيهِمْ وَيَأْمُرُهُمْ فَإِنْ كَانَ يُرِيدُ أَنْ يَقْطَعَ بَعْثًا قَطَعَهُ أَوْ يَأْمُرَ بِشَيْءٍ أَمَرَ بِهِ ثُمَّ يَنْصَرِفُ

(صحيح البخاري)

நபி (ﷺ) அவர்கள் நோன்பு, மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் பெருநாள் திடலுக்கு வெளியேறிச் செல்வார்கள். அவர்கள் முதலாவது செய்யும் செயல் தொழுகையாகும். பின்னர் திரும்பி, மக்கள் முன் எழுந்து நிற்பார்கள். மக்கள் அவர்களது வரிசைகளில் அமர்ந்தவாறு இருந்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு உபதேசம் செய்வார்கள், போதனை செய்வார்கள், கட்டளையிடுவார்கள். போர்ப் படையை அனுப்ப வேண்டி இருப்பின் அதை அனுப்பி வைப்பார்கள், அல்லது ஏதாவது கட்டளையிடுவதாக இருப்பின் அது பற்றி கட்டளையிடுவார்கள். பின்னர் திரும்பி விடுவார்கள். (புகாரி).

عَنْ أُمِّ عَطِيَّةَ قَالَتْ كُنَّا نُؤْمَرُ أَنْ نَخْرُجَ يَوْمَ الْعِيدِ حَتَّى نُخْرِجَ الْبِكْرَ مِنْ خِدْرِهَا حَتَّى نُخْرِجَ الْحُيَّضَ فَيَكُنَّ خَلْفَ النَّاسِ فَيُكَبِّرْنَ بِتَكْبِيرِهِمْ وَيَدْعُونَ بِدُعَائِهِمْ يَرْجُونَ بَرَكَةَ ذَلِكَ الْيَوْمِ وَطُهْرَتَهُ

(صحيح البخاري)

பெருநாள் தினத்தில் குமரிப்பெண்களை அவர்களின் அறைகளில் இருந்து வெளியே கூட்டிச் செல்லும்படியும், கூடவே மாதவிடாய்ப் பெண்களையும் வெளியே அழைத்துச் செல்லும்படியும் நாம் ஏவப்பட்டிருந்தோம். அவர்கள் மக்களுக்குப் பின்னால் காணப்படும் (வரிசைகளில்) நிற்பார்கள், அவர்களுடைய தக்பீருடன் இவர்களும் தக்பீர கூறுவார்கள், அந்த நாளின் பரகத்தையும், அதன் பரிசுத்தத்தையும் ஆதரவு வைத்தவர்களாக அவர்களுடைய பிரார்த்தனையோடு இவர்களுடன் பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள் (புகாரி).

...... فَيَشْهَدْنَ جَمَاعَةَ الْمُسْلِمِينَ وَدَعْوَتَهُمْ وَيَعْتَزِلُ الْحُيَّضُ عَنْ مُصَلَّاهُنَّ قَالَتْ امْرَأَةٌ يَا رَسُولَ اللهِ إِحْدَانَا لَيْسَ لَهَا جِلْبَابٌ قَالَ لِتُلْبِسْهَا صَاحِبَتُهَا مِنْ جِلْبَابِهَا (صحيح البخاري)

மற்றொரு அறிவிப்பில்: அந்தப் பெண்கள், முஸ்லிம்-களின் கூட்டமைப்பிலும், அவர்களின் அழைப்பிலும் கலந்து கொள்வார்கள். மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் தமது தொழுமிடத்தில் இருந்து சற்று விலகி இருப்பார்கள், எம்மில் ஒரு பெண்மணி அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருத்திக்கு ஜில்பாப் என்ற மேலாடை இல்லாத போது (எப்படி) என்று கேட்டார். தனது தோழி அவளுக்கு அவளிடம் (மேலதிமாகவுள்ள) மேலாடையை அணிவித்துவிடட்டும் எனக் கூறினார்கள். (புகாரி).

இவ்வளவு தெளிவான ஹதீஸ்கள் இருந்தும் குர்ஆன், சுன்னாவைப் பேசுகின்ற மக்களில் சிலரும், இஸ்லாம் பேசுகின்ற பல அமைப்பைச் சார்ந் சகோதரர்களும் திடல் தொழுகையில் கரிசனை காட்டியதாகத் தெரியவில்லை.

## நேரகாலத்துடன் தொழுதல்.

நேர காலத்துடன் பெருநாள் தொழுகைகளைத் தொழப் பழக்குவது பள்ளி இமாம், அதன் பரிபாலன சபை உறுப்பினர்களின் மீதுள்ள தார்மீகக் கடமையாகும். சில ஊர்களில் இன்றும் ழுஹர் தொழும் நேரம் வரை பெருநாள் தொழுதுவதையும், ஒரு பெருநாள் தொழுகை பலவிடுத்தம் தொழப்படுவதையும் இன்று வரை நடைமுறையில் காண்கின்றோம். இது நபி (ﷺ) அவர்களின் வழியுடன் முரண்பட்ட வழிமுறையாகும்.

பெருநாள் தொழுகை காலதாமதமாக தொழுவிக்கப்-படுவதை அவதானித்த நபித்தோழர் அப்துல்லாஹ் பின் பிஸ்ர் (ரழி) அவர்கள்: (البخاري) إِنْ كُنَّا فَرَغْنَا فِي هَذِهِ السَّاعَةِ وَذَٰلِكَ حِينَ التَّسْبِـــيحِ இந்த நேரத்தில் நாம் தொழுது முடித்திருப்போம் எனக் கூறுகின்றார்கள். (புகாரி)

இது நபி (ﷺ) அவர்களின் காலத்துடன் தொடர்பான நிகழ்வை அறிவுறுத்திக் கூறுகின்ற செய்தியாக இருப்பதால் இதுதான் நபி (ﷺ) அவர்களின் காலத்து நடைமுறை என்பதை நாம் புரிந்து செயல்பட வேண்டும்.

## பெருநாளும் ஜும்ஆவும் ஒரே நாளில் வந்தால் ...

பெருநாள் தினம் ஜும்ஆத்தினமாக இருப்பின் பெருநாள், ஜும்ஆ ஆகிய இரடண்தைத் தொழவும், அல்லது பெருநாள் தொழுகையைத் தொழுதுவிட்டு ஜும்ஆவை விட்டுவிடவும் பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டோருக்கு மார்க்கத்தில் சலுகை தரப்பட்டுள்ளது.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ قَدْ اجْتَمَعَ فِي يَوْمِكُمْ هَذَا عِيدَانِ فَمَنْ شَاءَ أَجْزَأَهُ مِنْ الْجُمُعَةِ وَإِنَّا مُجَمِّعُونَ سنن أبي داود

உங்களது இன்றைய இத்தினத்தில் இரு பெருநாட்கள் ஒன்று சேர்ந்துள்ளன. ஆகவே யார் விரும்புகின்றாரோ அவர் ஜும்ஆ தொழாது அதைப் போதுமாக்கிக் கொள்ள முடியும். நாம் ஜும்ஆத் தொழுகை நடத்துவோம் என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத்).

பெருநாள் தொழும் அதே தினத்தில் ஜும்ஆவை விரும்பினால் தொழலாம், இல்லாத போது அந்தப் பெருநாள் தொழுகை ஜும்ஆக்குப் போதுமானதாகக் கொள்ளப்படும். அதே வேளை, இமாம் அந்த தொழுகையை நடத்துவார். நபி (ﷺ) அவர்கள் அவ்வாறே அதைப் பேணி இருக்கின்றார்கள் என்பதை மேலே உள்ள நபி மொழியில் இருந்து விளங்க முடியும்.

عَنْ النُّعْمَانِ بْنِ بَشِيرٍ قَالَ كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقْرَأُ فِي الْعِيدَيْنِ وَفِي الْجُمُعَةِ بِسَبِّحِ اسْمَ رَبِّكَ الْأَعْلَى وَهَلْ أَتَاكَ حَدِيثُ الْغَاشِيَةِ قَالَ وَإِذَا اجْتَمَعَ الْعِيدُ وَالْجُمُعَةُ فِي يَوْمٍ وَاحِدٍ يَقْرَأُ بِهِمَا أَيْضًا فِي الصَّلَاتَيْنِ (مسلم)

நபி (ﷺ) அவர்கள் ஜும்ஆத்தினத்திலும், இரு பெருநாள் தினங்களிலும் ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அ.்.லாவையும், ஹல்அதாக ஹதீஸுல் காஷியாவையும் ஓதுபவர்களாக இருந்தார்கள். பெருநாளும், ஜும்ஆவும் ஒரே தினத்தில் வந்தால் அவ்விரண்டையுமே தொழுகையில் ஓதுபவர்-களாக இருந்தார்கள் என்று நு.்.மான் பின் பஷீர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம்)

இது பெருநாள் தினத்தில் ஜும்ஆத் தொழுவிக்கப்-பட்டிருப்பதை தெளிவுபடுத்தும் செய்தியாகும். சலுகையை கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற மனோ நிலையில் இருக்கும் சகோதரர்கள் இந்தச் செய்தி பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

## பெருநாள் தின விளையாட்டுக்கள்

வருடத்தில் இரு பெருநாட்களையே இஸ்லாம் மார்க்கமாக்கியுள்ளது. அவ்விரு தினத்திலும் மார்க்கம் அனுமதித்த விளையாட்டுக்களை முஸ்லிம்கள் விளை-யாடவும், அவற்றைக் கண்டுகழிக்கவும் அனுமதித்துள்ள இஸ்லாம் அந்த தினத்தில் கவிதைகள், பாடல்கள் பாடி மகிழ சிறுவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதை பின் வரும் நபிமொழி உறுதி செய்கின்றது.

عَنْ أَنَسٍ قَالَ قَدِمَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الْمَدِينَةَ وَلَهُمْ يَوْمَانِ يَلْعَبُونَ فِيهِمَا فَقَالَ مَا هَذَانِ الْيَوْمَانِ قَالُوا كُنَّا نَلْعَبُ فِيهِمَا فِي الْجَاهِلِيَّةِ فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ اللهَ قَدْ أَبْدَلَكُمْ بِهِمَا خَيْرًا مِنْهُمَا يَوْمَ الْأَضْحَى وَيَوْمَ الْفِطْرِ (أبو داود/١١٣٤)

நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் மதீனாவிற்கு (ஹிஜ்ரத்) வந்த போது அங்குள்ள மக்கள் இரு நாட்களை ஒதுக்கி விளையாடுவதைக் கண்டார்கள். இந்த இரு நாட்களும் என்ன (எதற்காக விளைாடுகின்றீர்கள்) என கேட்டபோது அதில் “ஜாஹிலிய்யா” அறியாமைக்காலத்தில் விளையாடும் வழக்கமுடையோராக இருந்தோம் எனக் கூறினர். அவ்விரு நாட்களைவிட சிறந்த இரண்டு நாட்களை அல்லாஹ் உங்களுக்கு பகரமாக தந்துள்ளான். (அவைதாம்) ஹஜ்ஜுப் பெருநாளும், நோன்பு பெருநாளும் எனக் கூறினார்கள். (அபூதாவூத். ஹதீஸ் இல: 1134).

வருடத்தில் இரண்டு நாட்களைத் தேர்வு செய்து அறியாமைக் காலத்தில் விளையாடி வந்த நடைமுறைப் பழக்கத்தின் அடிப்படையிலேயே நபித்தோழர்கள் விளையாடி வந்திருக்கின்றனர். அது மாற்று மதத்தவரின் செயலுக்கு ஒப்பாக இருந்ததால் நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் அதனை அங்கீகரிக்கவில்லை.

عَنْ عَائِشَةَ أَنَّ أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ دَخَلَ عَلَيْهَا وَعِنْدَهَا جَارِيَتَانِ فِي أَيَّامِ مِنًى تُدَفِّفَانِ وَتَضْرِبَانِ وَالنَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مُتَغَشٍّ بِثَوْبِهِ فَانْتَهَرَهُمَا أَبُو بَكْرٍ فَكَشَفَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنْ وَجْهِهِ فَقَالَ دَعْهُمَا يَا أَبَا بَكْرٍ فَإِنَّهَا أَيَّامُ عِيدٍ وَتِلْكَ الْأَيَّامُ أَيَّامُ مِنًى وَقَالَتْ عَائِشَةُ رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَسْتُرُنِي وَأَنَا أَنْظُرُ إِلَى الْحَبَشَةِ وَهُمْ يَلْعَبُونَ فِي الْمَسْجِدِ فَزَجَرَهُمْ عُمَرُ فَقَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ دَعْهُمْ أَمْنًا بَنِي أَرْفِدَةَ يَعْنِي مِنْ الْأَمْنِ

(صحيح البخاري)

மினாவுடைய தினத்தில் அபூபக்கர் (ரழி) அவர்கள் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் வந்தார்கள். அங்கு இரு சிறுமிகள் ஆடிப்பாடி (மகிழ்ந்து) குதூகலித்துக் கொண்டிருந்தனர். நபி (ﷺ) அவர்கள் தனது ஆடையால் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தார்கள், அவ்விரு சிறுமிகளையும் அபூபக்கர் (ரழி) அவர்கள் அதட்டினார்கள். உடனே நபி (ﷺ) அவர்கள் தனது முகத்தைத் திறந்து அபூபக்கரே! அவ்விருவரையும் விட்விடுங்கள். பெருநாள் தினமாச்சே! எனக் கூறினார்கள். அது மினாவின் நாட்களாக இருந்தது. அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். நான் ஹபஷா நாட்டு மக்களின் (வீரவிளையாட்டினை) பார்த்துக் கொண்டிருப்பேன், நபி (ﷺ) அவர்கள் என்னை மறைத்துக் கொண்ருப்பார்கள். மக்கள் பள்ளியில் (திடலில்) விளையாடுவார்கள். உமர் (ரழி) அவர்கள் சிறு கற்களை (எடுப்பதற்காக) குனிந்து எடுத்து அவற்றின் மூலம் அவர்கள் பக்கம் எறிந்தார்கள் அப்போது உமரே! அவர்களை நிம்மதியாக (விளையாட) விட்டுவிடும் என்று கூறினார்கள். (புகாரி).

பெருநாள் தினத்தில் மார்க்க வரையறையைப் பேணிய விளையாட்டு நிகழ்வுகள் நடந்தேறுவதும், பெண்கள் விளையாட்டுக்களைக் கண்டு கழிப்பதும் மார்க்கம் அனுமதி வழங்கியுள்ள அம்சங்களில் உள்ளவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## அல்குர்ஆனுடன் நமது உரவை தொடர்வோம்.

அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆன் நம்மை ஈருலகிலும் நல்வாழ்வைக் கொண்டு நன்மாராயம் கூறுகின்றது. அது எவ்வாறான உயர் விழுமியங்களைக் கொண்டிருக்கின்றது என்பது பற்றி நோக்குவோம்.

☞ **சமூக மறுமலர்ச்சி**

அல்குர்ஆன் அல்லாஹ்வின் அருள்மிகு வேதமாகும். அதனை சுமந்துள்ள முஸ்லிம் சமூகம் அதனை பேணிப் பாதுகாப்பதுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாது பிற சமூகத்திடமும் அதன் போதனைகளைக் கொண்டு செல்வது அவர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பிற சமயங்களிடம் இறைபோதனை என்பது கிடையாது. மாற்றமாக சீர்திருத்தவாதிகள், தத்துவவியலாளர்கள், கல்வியலாளர்கள் போன்றவர்களால் முன்மொழியப்பட்ட தத்துவங்கள், கோட்பாடுகள் போன்றவற்றால் தமது சமய வழிமுறைகளை வகுத்து செயல்படுகின்றனர். காலப்-போக்கில் அது வழக்கொழிந்து நடைமுறைச் சாத்திய-மற்றதாக மாறிவிடுவதே வரலாறு.

அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆன் அருள் நிறைந்த நூலாகும். அது எல்லாக்காலத்திற்கும், சூழலுக்கும் பொருந்திச் செல்லும் போதனைகளை உள்ளடக்கி உள்ளது. மகிழ்ச்சி, சந்தோஷம், நட்பாக்கியங்கள் அனைத்தும் அதில் உள்ளடங்கி இருக்கின்றது.

فَمَنِ اتَّبَعَ هُدَايَ فَلَا يَضِلُّ وَلَا يَشْقَى طه ١٢٣

யார் எனது நேர்வழியைப் பின்பற்றினாரோ அவர் வழிதவறவும் மாட்டார், துற்பாக்கியம் அடையவும் மாட்டார். (தாஹா: 123)

مَا أَنْزَلْنَا عَلَيْكَ الْقُرْآنَ لِتَشْقَى (١) إِلَّا تَذْكِرَةً لِمَنْ يَخْشَى (٢) طه ٣١

தாஹா, (நபியே!) நீர் துற்பாக்கியவாலியாகுவதற்காக இந்த அல்குர்ஆனை நாம் உம்மீது இறக்கிவைக்கவில்லை. அல்லாஹ்வை அஞ்சி நடப்பவர்களுக்கு ஞாபகமூட்டு-வதற்காகவே (இறக்கிவைத்தோம்).

அருட்பாக்கியங்களும், நட்பாக்கியங்களும் நிறைந்த அருள் மிகு வேதத்துடன் நமது உறவுகளை மீண்டும் மீண்டும் புதிப்பிக்க கடமைப்பட்டுள்ளோம்.

## ☞ அல்குர்ஆனை கற்றல், கற்பித்தல்.

خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ (صحيح البخاري)

உங்களில் சிறந்தவர் அல்குர்ஆனைக் கற்று அதனை (பிறருக்கு) கற்றுக் கொடுப்பவர் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (புகாரி). ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் படிக்கின்ற அனைத்துக் கல்விகளிலும் சிறந்த கல்வி குர்ஆனியக் கல்வியாகும்.

நபித்தோழர்கள் அல்குர்ஆனை சுமந்தவர்கள், அதன்படி வாழ்ந்தவர்கள் என அறியப்பட்டவர்களாக இருந்தனர் என்பதே அவர்கள் பற்றிய வரலாறாகும். அதனை பின்வரும் நபி மொழிமூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

عَنِ ابْنِ عُمَرَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم وَقَدْ سَافَرَ النَّبِيُّ صلى الله عليه وسلم وَأَصْحَابُهُ فِي أَرْضِ الْعَدُوِّ وَهُمْ يَعْلَمُونَ الْقُرْآنَ. صحيح البخاري

நபி (ﷺ) அவர்களும், அவர்களின் தோழர்களும் அல்குர்ஆனை எதிரிகளின் பிரதேசங்களுக்கு கொண்டு செல்வார்கள், அவர்கள் அல்குர்ஆனை கற்றுக் கொள்வார்கள் (புகாரி)

அல்குர்ஆனிய வழியில் வாழ்ந்த ஆரம்பகால முஸ்லிம்கள் குர்ஆனை தாமும் படித்தது தமது குழந்தைகளுக்கு அதனைக் கற்பித்ததன் விளைவாக உலகில் முன்மாதிரி சமூகமாக அறியப்பட்டனர்.

அல்குர்ஆனை தமது வாழ்வில் இருந்து எப்போது அவர்கள் விலக்கிக் கொண்டார்களோ அப்போது இழிவும் கேவலமும் அவர்களை சூழ்ந்து கொண்டது.

عَنِ ابْنِ عَبَّاسٍ أَنَّهُ قَالَ كَانَ رَسُولُ اللهِ -صلى الله عليه وسلم- يُعَلِّمُنَا التَّشَهُّدَ كَمَا يُعَلِّمُنَا السُّورَةَ مِنَ الْقُرْآنِ أخرجه مسلم

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் அல்குர்ஆனில் இருந்து சூராக்களை எங்களுக்கு கற்பிப்பது போன்று தஷஹ்ஹுதையும் எமக்கு கற்பிப்பார்கள். (நூல்: முஸ்லிம். அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள்)

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ، رَضِيَ اللَّهُ عَنْهُمَا، قَالَ: كَانَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم يُعَلِّمُنَا الاِسْتِخَارَةَ فِي الأُمُورِ كَمَا يُعَلِّمُنَا السُّورَةَ مِنَ الْقُرْآنِ - أخرجه البخاري

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் அல்குர்ஆனில் இருந்து சூராக்களை கற்பிப்பிப்பது போன்று இஸ்திஹாரா தொழுகை முறையையும் கற்பிப்பார்கள். அறிவிப்பவர் ஜாபிர் (ரழி) அவர்கள். (ஆதார நூல்: புகாரி)

☞ **சூராக்களின் மகிமை அறிந்து பாடமிடுதல்.**

அல்குர்ஆனை மனனம் செய்வது மிகப் பெரும் சிறப்பாகும். மனனம் செய்ய முடியாதவர்கள் அல்லாஹ்வின் தூதரால் சிறப்பித்து கூறப்படும் அத்தியாயயங்கள், வசனங்ளை பாடமிடுவது கடமையாகும்.

قَالَ رَسُولُ اللهِ -صلى الله عليه وسلم- « الآيَتَانِ مِنْ آخِرِ سُورَةِ الْبَقَرَةِ مَنْ قَرَأَهُمَا فِى لَيْلَةٍ كَفَتَاهُ (أخرجه مسلم)

அல்பகரா அத்தியாயத்தில் இடம் பெறும் இரண்டு இறுதி வசனங்களை ஒரு இரவில் ஓதுபவருக்கு அதுவே (அனைத்திற்கும்) போதுமானதாகும். (முஸ்லிம்). இது இரண்டு வசனங்களின் சிறப்பாக கூறப்பட்டுள்ளது.

அவ்வாறே ஆயத்துல் குர்ஸியை பாடமிட்டு இரவில் படுக்கைக்கு செல்லுமுன் ஓதுவதால் வானவர் ஒருவர் வருகை தருவதுடன், ஷைதானில் இருந்து பாதுகாப்பும் தரப்படும் என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்).

ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் பாடமிடவேண்டிய வசனங்கள் போன்று கட்டாயமாக பாடமிட வேண்டிய சிறு சூராக்களையும் பாடமிட வேண்டும். குறிப்பாக அல்.ஃ.பாத்திஹா அத்தியாத்தை மணனம் இட்டிருக்க வேண்டும்.

உபை பின் க.ஃ.ப் (ரழி) அவர்களை மஸ்ஜிதுன் நபவியில் சந்தித்த நபி (ﷺ) அவர்கள், க.ஃ.பே! நான் இந்தப் பள்ளியை விட்டும் வெளியேறிச் செல்வதற்கு முன் அல்குர்ஆனில் உள்ள மாபெரும் மகத்துவம் நிறைந்த ஒரு சூராவை உனக்கு கற்றுத்தருவேன் எனக் குறிப்பிட்ட பின் (மறந்தவர்களாக) அங்கிருந்து வெளியேறிச் செல்ல முயன்ற நபி (ﷺ) அவர்களிடம் அதுபற்றி ஞாபகப்படுத்திய க.ஃ.ப் (ரழி) அவர்களிடம்

{اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ} هِيَ السَّبْعُ الْمَثَانِي وَالْقُرْآنُ الْعَظِيمُ الَّذِي أُوتِيتُهُ ((أخرجه البخاري))

"அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்'', அது திரும்பத் திரும்ப ஓதப்படும் வசனங்கள், நான் வழங்கப்பட்டுள்ள மகத்துவம் நிறைந்த அல்குர்ஆன் எனக் கூறினார்கள். (புகாரி).

## ☞ முறைப்படி திருத்தமாக ஓதுதல்

அல்குர்ஆன் அல்லாஹ்வின் பேச்சாகும். எனவே அதன் கருத்துக்களை சிதைக்காது திருத்தமாகவும் தெளிவாகவும் ஓதவேண்டும்.

وَرَتِّلِ الْقُرْآنَ تَرْتِيلًا (٤) المزمل ٤

(நபியே)! அல்குர்ஆனை சரியான முறைப்படி ஓதுவீராக. (அத்: அல்முஸ்ஸம்மில்: வச: 04)

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ : قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم : لَيْسَ مِنَّا مَنْ لَمْ يَتَغَنَّ بِالْقُرْآنِ وَزَادَ غَيْرُهُ يَجْهَرُ بِهِ. (أخرجه البخاري)

அல்குர்ஆனை ராகமாக ஓதாதவர் நம்மைச் சார்ந்தவர் அல்லர் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி).

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ : مَا أَذِنَ اللَّهُ لِشَيْءٍ مَا أَذِنَ لِلنَّبِيِّ أَنْ يَتَغَنَّى بِالْقُرْآنِ (صحيح البخاري)

ஒரு நபி அல்குர்ஆனை ராகமாக ஓதுகின்ற போது அல்லாஹ் அதற்காக செவிமடுக்கும் அளவு வேறு எதற்கும் செவிமடுப்பதில்லை என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

## ☞ குர்ஆனின் தனித்துவமான சிறப்பை அறிந்து ஓதுதல்.

குர்ஆனின் சிறப்பை பற்றி இடம் பெற்றுள்ள பல்வேறு நபிமொழிகளில் முழுக்குர்ஆனின் பொதுவான சிறப்பு, சில அத்தியாயங்களின் சிறப்பு, சில வசனங்களின் சிறப்பு என பல்வேறு அமைப்பில் இடம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

நபிகள் நாயகம் (ﷺ) அவர்களும், நபித்தோழர்களும் இந்தக் குர்ஆனை அல்லும் பகலுமாக ஓதி இருக்கின்-றார்கள் என்பதற்கு நூற்றுக்கணக்கான சம்பவங்கள் பதியப்-பட்டுள்ளன. ஒருவர் அல்குர்ஆனை முழுமையாக ஓதிட முயற்சி செய்வது போன்று சில சூராக்கள், வசனங்களின் சிறப்புக்களை அறிந்து ஓதுவதும் முக்கியமான ஒரு அம்சமாகும்.

اقْرَءُوا الْقُرْآنَ فَإِنَّهُ يَأْتِي يَوْمَ الْقِيَامَةِ شَفِيعًا لأَصْحَابِهِ اقْرَءُوا الزَّهْرَاوَيْنِ الْبَقَرَةَ وَسُورَةَ آلِ عِمْرَانَ فَإِنَّهُمَا تَأْتِيَانِ يَوْمَ الْقِيَامَةِ كَأَنَّهُمَا غَمَامَتَانِ أَوْ كَأَنَّهُمَا غَيَايَتَانِ أَوْ كَأَنَّهُمَا فِرْقَانِ مِنْ طَيْرٍ صَوَافَّ تُحَاجَّانِ عَنْ أَصْحَابِهِمَا اقْرَءُوا سُورَةَ الْبَقَرَةِ فَإِنَّ أَخْذَهَا بَرَكَةٌ وَتَرْكَهَا حَسْرَةٌ وَلاَ تَسْتَطِيعُهَا الْبَطَلَةُ. (أخرجه مسلم)

அல்குர்ஆனை நீங்கள் ஓதுங்கள், ஏனெனில் நிச்சயமாக மறுமை நாளில் அதன் தோழர்களுக்கு அது சிபாரிசு செய்யும். மேலும் அல்பகரா, ஆலுஇம்ரான் என்ற இரு மலர்களை ஓதுங்கள் நிச்சயமாக அவ்விரண்டும் மறுமை நாளில் இரு பெரும் மேகக் கூட்டங்கள் போன்று வரும், அல்லது அணிவகுத்தவாறு செல்லும் பறவைக் கூட்டங்கள் போன்று காட்சிதந்து அவ்விரண்டு அத்தியாயங்களையும் ஓதியவர்களுக்காக மன்றாடும். (நிழல் தரும்). அல்பகராவை ஓதுங்கள் ஏனெனில் அதனை எடுத்துக் கொள்வது பரகத், அதனை விட்டு ஒதுங்குவது கைசேதம், வீணர்களால் (சூனியக்காரர்களால்) எந்த சூழ்ச்சியும் செய்ய முடியாது. (நூல்: முஸ்லிம்).

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللهِ –صلى الله عليه وسلم– قَالَ« لاَ تَجْعَلُوا بُيُوتَكُمْ مَقَابِرَ إِنَّ الشَّيْطَانَ يَنْفِرُ مِنَ الْبَيْتِ الَّذِى تُقْرَأُ فِيهِ سُورَةُ الْبَقَرَةِ صحيح مسلم

உங்கள் வீடுகளை மண்ணறைகளாக ஆக்கிக் கொள்ளா-தீர்கள். (அங்கு குர்ஆன் ஓதப்படுவதில்லை) எந்த வீட்டில் அல்பகரா சூரா ஓதப்படுகின்றதோ அதில் இருந்து நிச்சயமாக ஷைதான் வெருண்டோடுகின்றான் என நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

### ☞ அல்குர்ஆனின் சப்தத்தால் அறியப்பட்ட நபித்-தோழர் இல்லங்கள்.

இன்று இரவு காலங்களில் டீ.வி, சினிமா, இசை நடனம் போன்ற ஹராமான சப்தங்கள் கொண்டு அறியப்படும் முஸ்லிம் வீடுகள் போன்று நபித்தோழர்களின் இல்லங்கள் அல்லாஹ்வின் பேச்சாகிய அல்குர்ஆனின் சப்தம் கொண்டு அறியப்பட்டிருந்தன என்பது வரலறாகும்.

عَنْ أَبِي مُوسَى قَالَ قَالَ رَسُولُ اللهِ -صلى الله عليه وسلم- « إِنِّى لأَعْرِفُ أَصْوَاتَ رُفْقَةِ الأَشْعَرِيِّينَ بِالْقُرْآنِ حِينَ يَدْخُلُونَ بِاللَّيْلِ وَأَعْرِفُ مَنَازِلَهُمْ مِنْ أَصْوَاتِهِمْ بِالْقُرْآنِ بِاللَّيْلِ وَإِنْ كُنْتُ لَمْ أَرَ مَنَازِلَهُمْ حِينَ نَزَلُوا بِالنَّهَارِ (أخرجه مسلم)

அஷ்அரி கோத்திர நண்பர்களின் வீடுகள் பற்றி நான் பகல் வேளைகளில் அவர்களின் வீடுகள் பற்றி நான் அறியாதிருந்தாலும் இரவில் அவர்கள் வீடுகளில் இருப்பது பற்றி ஓதப்படும் குர்ஆனின் சப்தத்தை வைத்து நிச்சயமாக நான் அறிந்து கொள்வேன் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).

பின்வரும் சம்பவத்தை கொஞ்சம் சிந்தியுங்கள். அபூமூஸா (ரழி) அவர்களிடம் முஆத் பின் ஜபல் (ரழி) அவர்கள் நீர் அல்குர்ஆனை எப்படி ஓதுகின்றீர் என வினவினார்கள். அதற்க அவர்கள், நின்ற நிலையிலும், அமர்ந்த வண்ணமும், தனது வாகனத்திலும் (ஓதுகின்றேன்), அதனை நான் மேலும்மேலும் ஓதுவேன் என்றார்கள். (புகாரி)

நபித்தோழர்கள் அல்குர்ஆனை எல்லா நிலையிலும் ஓதி இருக்கின்றார்கள் என்பதை விளக்கும் சிறிய சரித்திரமாகும்.

### ☞ சிறு பகுதியாக்கி (ஹிஸ்புகளாக) ஓதுதல்

நபித்தோழர்களின் காலத்தில் பகல் காலங்களை விட இரவு காலங்களில்தான் அல்குர்ஆன் அதிகமாக ஓதப்பட்டுள்ளது. போருக்கு செல்வது, தொழிலுக்கு செல்வது, தோட்டங்களில் வேலை செய்வது போன்றவைகள் இதற்கு காரணங்களாக இருக்கலாம்.

இரவில் வழமையாக ஓதிவருபவருக்கு ஓதுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காத போது அவர் அதனை ஃபஜ்ர் நேரத்திற்கும் ழுஹர் நேரத்திற்கும் இடையில் ஓதிக் கொள்வதால் அந்த நன்மை அடைந்து கொள்வார் என்பது நபி மொழியாகும்.

مَنْ نَامَ عَنْ حِزْبِهِ أَوْ عَنْ شَيْءٍ مِنْهُ فَقَرَأَهُ فِيمَا بَيْنَ صَلاَةِ الْفَجْرِ وَصَلاَةِ الظُّهْرِ كُتِبَ لَهُ كَأَنَّمَا قَرَأَهُ مِنَ اللَّيْلِ. أخرجه مسلم

எவர் ஒருவர் தனது ஹிஸ்பை, அல்லது ஏதாவது ஒரு பகுதியை ஓதாது உறங்கிவிட்டாரோ அவர்கள் அதனை ஃபஜ்ர் தொழுகைக்கும், ளுஹர் தொழுகைக்கும் இடையில் ஓதிக் கொண்டால் அதனை அவர் இரவில் ஓதியது போன்றதுதான் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).

ஒரு முஸ்லிமுக்கு என்ன வேலைப்பளுக்கள் இருந்த போதிலும் தனது இரவுகாலங்களில் அல்குர்ஆனில் ஒரு பகுதியை ஓதாது உறங்குவது கூடாது என்பதை இந்த நபிமொழி உணர்த்துகின்றது.

இந்த நடைமுறை பற்றி ர.ஃ.ல், தக்வான், உஸைய்யா போன்ற இறைமறுப்புக் காபிர் கோத்திரங்களால் கொலை செய்யப்பட்ட குர்ஆனை மனனம் செய்த ஸஹாபா ஹாபிழ்களின் வாழ்க்கையில் பார்க்கின்றோம். அந்த நல்லடியார்கள் பற்றி நபித்தோழர்கள் இவ்வாறு பதிவு செய்கின்றார்கள்.

كُنَّا نُسَمِّيهِمُ الْقُرَّاءَ فِي زَمَانِهِمْ كَانُوا يَحْتَطِبُونَ بِالنَّهَارِ وَيُصَلُّونَ بِاللَّيْلِ حَتَّى كَانُوا بِبِئْرِ مَعُونَةَ قَتَلُوهُمْ (أخرجه البخاري)

நாம் அவர்களை அவர்களது காலங்களில் காரிகள் என்றழைப்போம். அவர்கள் பகல் காலங்களில் விறகு எடுப்பார்கள். இரவில் (குர்ஆனை ஓதி) நின்று தொழுவார்கள். பி.ஃ.ர் மஊனா என்ற ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்டு (மோசடியாக) கொலை செய்யப்பட்டார்கள். (பார்க்க: புகாரி : 4090, முஸ்னத் அஹ்மத் 13708 போன்ற இலக்க ஹதீஸ்கள்) உயிரோட்டமான வரலாற்றைக் கொண்ட இந்த உத்த-மர்களின் வாழ்வை படிப்பினையாகக் கொள்வோமாக!

### ☞ அல்குர்ஆனுடனான நமது கடமைகள்.

அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆனை ஓதுவதால் மாத்திரம் அதன் கடமைகளைச் சரிவர நிறைவேற்-றியதாகக் கொள்ள முடியாது. அதற்கு இன்னும் சில கடமைகள் உண்டு. அவற்றையும் பேணி நடப்பது அவசியமாகும். அவை பற்றி இங்கு சுருக்கமாக தரப்படுகின்றது.

### ☞ அல்குர்ஆனிய போதனைகளை சிந்தித்தல்.

இது அதன் அடிப்படை மொழி அறிவு அல்லது குர்ஆனின் மொழியாக்கம் இன்றி சாத்தியமற்றதாகும். எனவே இவ்விரண்டில் ஒன்றை அறிந்தவராக ஒருவர் இருக்க வேண்டும்.

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللَّهِ لَوَجَدُوا فِيهِ اخْتِلَافًا كَثِيرًا [النساء : ٨٢]

இந்தக் குர்ஆனை அவர்கள் சிந்திக்க வேண்டாமா? அல்லாஹ் அல்லாதவர்களிடம் இருந்து இது வந்திருக்-குமாகயிருந்தால் அதில் பாரிய முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள். (அத்: அந்நிஸா: வசனம்: 82)

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ أَمْ عَلَىٰ قُلُوبٍ أَقْفَالُهَا محمد ٢٤

இந்தக் குர்ஆனை அவர்கள் சிந்திக்க வேண்டாமா? அல்லது உள்ளங்களில் பூட்டுகள் (போடப்பட்டு) இருக்கின்றனவா? (அத்: முஹம்மத்: வச: 24)

எனவே முரண்பாடுகள் அற்ற, அல்லாஹ்விடம் இருந்து நேரடியாக இறக்கப்பட்ட இந்த வேத வரிகள் பற்றி சிந்திப்பது நமது கடமையாகும். அதற்குரிய சில உதாரணங்கள் இங்கு தரப்படுகின்றன.

### ☞ உள்ளத்தால் அஞ்சுவதும் அழுவதும்.

இறைவசனத்தை முன்னோக்கும் மு:ஃமின்கள் உள்ளத்தால் அஞ்சி அழுவது இறையச்சத்தின் ஒரு பகுதியாகும். பின்வரும் சம்பவத்தை சற்று சிந்தியுங்கள்.

عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ قَالَ : قَالَ لِي النَّبِيُّ صلى الله عليه وسلم اقْرَأْ عَلَيَّ قَالَ نَعَمْ فَقَرَأْتُ سُورَةَ النِّسَاءِ حَتَّى أَتَيْتُ إِلَى هَذِهِ الآيَةِ {فَكَيْفَ إِذَا جِئْنَا مِنْ كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَى هَؤُلاَءِ شَهِيدًا} قَالَ حَسْبُكَ الآنَ فَالْتَفَتُّ إِلَيْهِ فَإِذَا عَيْنَاهُ تَذْرِفَانِ

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அல்குர்ஆனை எனக்கு ஓதிக் காட்டும்படி என்னிடம் கூறினார்கள்.

قُلْتُ يَا رَسُولَ اللهِ آقْرَأُ عَلَيْكَ وَعَلَيْكَ أُنْزِلَ

அல்லாஹ்வின் தூதரே! உங்கள் மீதுதான் குர்ஆன் இறக்கப்பட்டிருக்க, நான் உங்களுக்கு ஓதிக் காண்பிக்க வேண்டுமா என நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம்! பிறர் ஓதுவதை செவிமடுக்க நான் விரும்புகின்றேன் எனக் கூறியதும் நான் அந்நிஸா அத்தியாயத்தை தொடங்கி ஓதினேன். நான் அந்நிஸா அத்தியாயம் 40 வது வசனமான

فَكَيْفَ إِذَا جِئْنَا مِنْ كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَى هَؤُلَاءِ شَهِيدًا [النساء: ٤١] (أخرجه البخاري)

ஒவ்வொரு சமுதாயத்தவருக்கு ஒரு சாட்சியாளரை கொண்டுவருவோம், இந்த உம்மத்தின் சாட்சியளாராக உம்மை நிறுத்தினால் (நிலைமை) எப்படி இருக்கும் என்ற வசனத்தை அடைந்ததும் நிறுத்தும், போதும் என்றார்கள். நான் அவர்களை அவதானித்த போது அவர்களின் இரு கண்ககளில் இருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது என இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள் (புகாரி)

அல்குர்ஆனை ஓதுகின்ற போது அழுகின்ற நிலை நபித்தோழர்களிடம் பரவலாக காணப்பட்டது.

ஹிஜ்ரத்தின் போது மக்காவாழ் காபிர்களின் பாதுகாப்பில் தங்கிய அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்கள் ஒரு இடத்தில் பள்ளி அமைத்து தொழுது வந்தார்கள். அதில் அவர்கள் அல்குர்ஆனை ஓதுவார்கள். மக்கா முஷ்ரிக்களின் பெண்கள், சிறுவர்கள் அதனை அவதானமாகவும், ஆச்சிரியமாகவும் பார்ப்பார்கள்.

وَكَانَ أَبُوبَكْرٍ رَجُلاً بَكَّاءً لاَ يَمْلِكُ عَيْنَيْهِ إِذَا قَرَأَ الْقُرْآنَ فَأَفْزَعَ ذَلِكَ أَشْرَافَ قُرَيْشٍ مِنَ الْمُشْرِكِينَ (أخرجه البخاري)

அபூ பக்கர் ஸித்தீக் (ரழி) அவர்கள் அதிகம் அழுகின்ற மனிதர்களாக இருந்தார்கள். அவர்கள் அல்குர்ஆனை ஓதினால் அழ ஆரம்பித்துவிடுவார்கள். இதனால் மக்கா முஷ்ரிக்களுக்கு திகில் ஏற்பட்டது (புகாரி)

☞ **நபி (ﷺ) அவர்கள் மரண நோயின் போது**

« مُرُوا أَبَا بَكْرٍ فَلْيُصَلِّ بِالنَّاسِ ».

மக்களுக்குத் தொழுவிக்கும்படி அபூபக்கரைப் பணியுங்கள் என நபி (ﷺ) அவர்கள் கூறிய போது

قَالَتْ فَقُلْتُ يَا رَسُولَ اللهِ إِنَّ أَبَا بَكْرٍ رَجُلٌ رَقِيقٌ إِذَا قَرَأَ الْقُرْآنَ لاَ يَمْلِكُ دَمْعَهُ فَلَوْ أَمَرْتَ غَيْرَ أَبِي بَكْرٍ (أخرجه مسلم)

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! அபூபக்கர் அவர்கள் மென்மையான மனிதர், அல்குர்ஆனை ஓதுகின்ற போது அவரது கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடுவார்கள். வேறு யாரையாவது ஏவினால் என்ன எனக் கேட்டார்கள். (முஸ்லிம்)

اَللَّهُ نَزَّلَ أَحْسَنَ الْحَدِيثِ كِتَابًا مُتَشَابِهًا مَثَانِيَ تَقْشَعِرُّ مِنْهُ جُلُودُ الَّذِينَ يَخْشَوْنَ رَبَّهُمْ ثُمَّ تَلِينُ جُلُودُهُمْ وَقُلُوبُهُمْ إِلَىٰ ذِكْرِ اللَّهِ الزمر ٢٣

அல்லாஹ்தான் செய்திகளில் ஒன்றுக்கொன்று ஒப்பான, மீண்டும் மீண்டும் வரக்கூடிய மிக அழகிய செய்தியை (இவ்)வேதத்தில் இறக்கிவைக்கின்றான். அதனால் தமது இரட்சகனை பயப்படுகின்ற மனிதர்களில் தோல்கள் நடுநடுங்குகின்றன. பின்பு, அவர்களின் தோல்களும், அவர்களின் இதயங்களும் அல்லாஹ்வின் போதனைக்காக நெகிழ்ந்துவிடுகின்றன. (சுமர்: 23)

இவை அல்குர்ஆன் மு.ஃ.மின்களின் உள்ளத்தை ஈமானியச் சுடரை தொடர்ந்தும் பாய்ச்சும் சக்திமிக்க வேதம் என்பதை உணர்த்துகின்றது.

## ☞ அல்குர்ஆனைப் புறக்கணிப்பது பெரும் பாவமாகும்.

அல்குர்ஆனிய போதனைகள் மனிதர்களுக்காக கொடுக்கப்பட்டவையாகும். அதன் போதனைகளை நம்பிய மு.்.மின்கள் அவற்றைப் புறக்கணிப்பது பெரும் பாவமாகும். அல்குர்ஆனை புறக்கணித்தல் என்பது அதனை:

- படிக்காமல், ஓதாமல், சிந்திக்காமல் இருப்பது, அதன் போதனைகளை புறக்கணிப்பது,
- பிறர் ஓதுகின்ற போது அதனை செவிமடுக்காதிருப்பது,
- பிற போதனைகளை அதன் போதனைகளை விட முற்படுத்துவது போன்ற அம்சங்களை உள்ளடக்கும்.

அல்குர்ஆனைப் புறக்கணித்து, பர்ளான தொழுகைகளை உதாசீனம் செய்த மனிதன் மண்ணறையில் பாரமான கல்லால் தலை நசுக்கப்பட்டு வேதனை செய்யப்படுவான் என நபி (ﷺ) அவர்கள் எச்சரித்துள்ளார்கள் (புகாரி).

## ☞ புது மாப்பிள்ளையும் புனிதமிகு குர்ஆனும்

அம்று பின் ஆஸ் (ரழி) அவர்கள் தனது மகன் அப்துல்லாஹ்வுக்கு நல்ல பரம்பரைப் பெண் ஒருவரை திருமணம் செய்து வைத்தார்கள். அவர்கள் தனது மருமகளிடம் சுக நல விசாரிப்பிற்காக சென்று தனது மகன் பற்றி விசாரித்த போது திருமணம் முடித்து எம்மிடம் வந்தது முதல் படுக்கை அறைக்கு வராத, எந்த விசாரணையும் செய்யாத ஒரு நல்ல மனிதர் என அவரது (மருமகள்) முறைப்பட்டார்கள். இந்த நிலை நீடித்து செல்வதைக் கண்ட அம்று (ரழி) அவர்கள் நபி (ﷺ) அவர்களிடம் இது பற்றி முறைப்பாடு செய்தார்கள். அவரை என்னிடம் அழைத்து வாருங்கள் என நபி (ﷺ) அவர்கள் பணித்தார்கள். அவ்வாறே அவர் அழைத்து வரப்பட்டார். அவரிடம்:

فَقَالَ كَيْفَ تَصُومُ قَالَ كُلَّ يَوْمٍ قَالَ وَكَيْفَ تَخْتِمُ قَالَ كُلَّ لَيْلَةً قَالَ صُمْ فِي كُلِّ شَهْرٍ ثَلَاثَةً وَاقْرَإِ الْقُرْآنَ فِي كُلِّ شَهْرٍ (أخرجه البخاري)

நீ எவ்வாறு நோன்பு நோற்கின்றாய்? எவ்வாறு குர்ஆனை ஓதி முடிக்கின்றாய் எனக் கேட்டார்கள். அவர், தினமும் நோன்பு நோற்கின்றேன், ஒவ்வொரு இரவும் (குர்ஆனை முழுமையாக ஓதி முடித்துவிடுவேன்) என்றார். மாதத்தில் மூன்று நாட்கள் நோன்பு நோற்றுக் கொள்! மாதம் ஒரு முறை குர்ஆனை ஓதி முடித்துக் கொள் எனக் கூறினார்கள். அதற்கு அவர் இந்தக்காலங்களை விடவும் அதிகம் நான் சக்தி பெறுவேன் என்கிறார். அவரை நெறிப்படுத்தும் முகமாக தாவூத் நபி போன்று நோற்றுக் கொள், ஒரு வாரத்திற்குள் மாத்திரம் குர்ஆனை முடித்துக் கொள் என உபதேசம் செய்தார்கள் (பார்க்க: புகாரி இல: 5052, முஸ்னத் அஹ்மத்: இல: 6477)

இது அன்றையக் கால புது மாப்பிள்ளைகளின் நிலை! நமது நிலை பற்றிக் கொஞ்சம் மீளாய்வு செய்வோம், அல்லாஹ்வின் வேதத்துடன் இணைந்திடுவாம். அல்லாஹ் அனைவருக்கும் நேர்வழி காட்டப் போதுமானவன்.

இன்னும் பல வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றை அறிஞர்களிடம் கேட்டறிந்து நமது வாழ்வில் செயல்படுத்தி ரமளானின் பண்முக சிறப்பை அடைந்திட முயற்சி செய்வோமாக!

رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ إبراهيم ٤١

*எமது இரட்சகனே! கேள்வி கணக்கு நாளின் போது எனக்கும் எனது பெற்றோருக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் மன்னிப்புத் தருவாயாக (இப்ராஹீம்: 41)*

# தொழுகையில் ஓதக்கூடிய திக்ருகள்

## தக்பீர் கட்டியதுடன்

اَللّٰهُمَّ بَاعِدْ بَيْنِيْ وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَّ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ اَللّٰهُمَّ نَقِّنِيْ مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الْأَبْيَضُ مِنَ الدَّنَسِ اَللّٰهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ. (رواه البخاري ومسلم)

وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِيْ فَطَرَ السَّمٰوٰتِ وَالْأَرْضَ حَنِيْفًا وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِيْنَ إِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ لَا شَرِيْكَ لَهٗ وَبِذٰلِكَ أُمِرْتُ وَأَنَا مِنَ الْمُسْلِمِيْنَ .اَللّٰهُمَّ أَنْتَ الْمَلِكُ لَآ إِلٰهَ إِلَّا أَنْتَ أَنْتَ رَبِّيْ وَأَنَا عَبْدُكَ ظَلَمْتُ نَفْسِيْ وَاعْتَرَفْتُ بِذَنْبِيْ فَاغْفِرْ لِيْ ذُنُوْبِيْ جَمِيْعًا إِنَّهٗ لَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ وَاهْدِنِيْ لِأَحْسَنِ الْأَخْلَاقِ لَا يَهْدِيْ لِأَحْسَنِهَا إِلَّا أَنْتَ وَاصْرِفْ عَنِّيْ سَيِّئَهَا لَا يَصْرِفُ عَنِّيْ سَيِّئَهَا إِلَّا أَنْتَ لَبَّيْكَ وَسَعْدَيْكَ وَالْخَيْرُ كُلُّهٗ فِيْ يَدَيْكَ وَالشَّرُّ لَيْسَ إِلَيْكَ أَنَا بِكَ وَإِلَيْكَ تَبَارَكْتَ وَتَعَالَيْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوْبُ إِلَيْكَ. (رواه مسلم)

## ருகூவில்

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ. (رواه مسلم)

سُبُّوْحٌ قُدُّوْسٌ رَبُّ الْمَلَائِكَةِ وَالرُّوْحِ. (رواه مسلم)

سُبْحَانَكَ اللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ. (رواه البخاري ومسلم)

اَللّٰهُمَّ لَكَ رَكَعْتُ وَبِكَ اٰمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ خَشَعَ لَكَ سَمْعِيْ وَبَصَرِيْ وَمُخِّيْ وَعَظْمِيْ وَعَصَبِيْ. (رواه مسلم)

## நிலையில் (இஃதிதாலில்)

اَللّٰهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمٰوَاتِ وَمِلْءَ الْأَرْضِ وَمِلْءَ مَا بَيْنَهُمَا وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ. (رواه مسلم)

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ حَمْدًا كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ. (رواه البخاري)

## ஸுஜூதில்

سُبْحَانَ رَبِّيَ الْأَعْلٰى. (رواه مسلم)

سُبُّوْحٌ قُدُّوْسٌ رَبُّ الْمَلَائِكَةِ وَالرُّوْحِ. (رواه مسلم)

سُبْحَانَكَ اللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ. (رواه البخاري ومسلم)

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذَنْبِيْ كُلَّهٗ دِقَّهٗ وَجِلَّهٗ وَأَوَّلَهٗ وَاٰخِرَهٗ وَعَلَانِيَتَهٗ وَسِرَّهٗ. (رواه مسلم)

اَللّٰهُمَّ لَكَ سَجَدْتُّ وَبِكَ اٰمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ سَجَدَ وَجْهِيْ لِلَّذِيْ خَلَقَهٗ وَصَوَّرَهٗ وَشَقَّ سَمْعَهٗ وَبَصَرَهٗ تَبَارَكَ اللهُ أَحْسَنُ الْخَالِقِيْنَ. (رواه مسلم)

## இரண்டு ஸுஜூதுகளுக்கிடையில்

رَبِّ اغْفِرْ لِيْ. رَبِّ اغْفِرْ لِيْ. (رواه أبوداود)

رَبِّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ وَاجْبُرْنِيْ وَارْزُقْنِيْ وَارْفَعْنِيْ. (رواه ابن ماجه)

## அத்தஹிய்யாத்

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهٗ اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ. (رواه البخاري ومسلم)

## ஸலவாத்

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ. اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ. (رواه البخاري)

## அத்தஹிய்யாத்திற்குப் பின்னர்

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُبِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ عَذَابِ النَّارِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ فِتْنَةِ الْمَسِيْحِ الدَّجَّالِ. (رواه البخاري)

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُبِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَأَعُوْذُبِكَ مِنْ فِتْنَةِ الْمَسِيْحِ الدَّجَّالِ وَأَعُوْذُبِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَفِتْنَةِ الْمَمَاتِ اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُبِكَ مِنَ الْمَأْثَمِ وَالْمَغْرَمِ.

(رواه البخاري ومسلم)

اَللّٰهُمَّ إِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ ظُلْمًا كَثِيْرًا وَلَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ فَاغْفِرْ لِيْ مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِيْ إِنَّكَ أَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ. (رواه البخاري ومسلم)

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ وَمَا أَسْرَفْتُ وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّيْ أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ. (رواه مسلم)